திருஞானசம்பந்தர் அருளிய

# அற்புதத் திருப்பதிகங்கள்

பதிக விளக்கத்துடன்




தெல்லிப்பழை, ஆனைக்குட்டிவளவு

## குலசிங்கம் காமாட்சிப்பிள்ளை
(கமலேஸ்வரி)

அந்தியேட்டித்தின வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு
திரு. வை. நாகராஜன்
23-07-2003

நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர் அருளிய

# அற்புதத் திருப்பதிகங்கள்

பதிக விளக்கத்துடன்

தொகுப்பு

கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை

தெல்லிப்பழை ஆனைக்குட்டிவளவு

திருமதி குலசிங்கம் காமாட்சிப்பிள்ளை

(கமலேஸ்வரி)

அந்தியேட்டித்தின வெளியீடு

2004-03-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அம்புலி காட்டி அமுதூட்டி
அருமைக் கதைகள் பலசொல்லி
நம்ப முடியா தளவிற்கு
நமது அறிவை வளர்த்தெடுத்த
இம்மா நிலத்திற் பெரியவராம்
எங்கள் அம்மா நினைவாக
எம்மான் தலைமன் கலட்டியுறை
எமதிறை தாளிற் சமர்ப்பித்தோம்

கணவன்
தி. குலசிங்கம்
2, Marlborough Parade,
Beverley Road,
Barming Maidstonekent
U.K.

பிள்ளைகள்
ந. ஜெயந்தி
ஸ்ரீ. சுமதி
கு. ரவிசங்கர்
கு. உதயசங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# அமரர்
# திருமதி குலசிங்கம் காமாட்சிப்பிள்ளை
## (கமலேஸ்வரி)




மலர்வு (BORN) 1935-06-21

உதிர்வு (DEATH) 2004-02-11


### திதி வெண்பா

ஆண்டு சுபானுவிலே ஆனைதைத் தேய்பிறையில்
ஈண்டுஷஷ்டி ஆய எழிற்திதியே - வேண்டிக்
குலசிங்கம் காமாட்சிப் பிள்ளைசுழு கன்தாள்
நலமென்றே நண்ணிநின்ற நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரைப் பெற்றவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பதிப்புரை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை என்னும் நூலிலுள்ள இத்திருப்பாடல் அம்மாவிற்குத் தித்திப்பானது. அவ்வளவிற்குத் தெல்லிப்பழைத் தலைமன்கலட்டி விநாயகர் அம்மாவை ஆட்கொண்டுவிட்டார். அந்த விநாயகர் சிந்தனை அவர் உள்ளத்து உறைந்த ஒன்று என்று சொல்லலாம். தெல்லிப்பழைத் துர்க்கையம்பாள் ஆலயம், தெல்லிப்பழை ஸ்ரீ காசிவிநாயகர் ஆலயம், கொழும்பு மயூரபதி அம்பாள் ஆலயம் என்பனவும் அம்மாவின் நினைவில் நீங்கா இடம்பெற்றவை.

இந்தக் கருத்தோட்டங்களுடனாகி நின்று அம்மாவின் அந்தியேட்டித்தின வெளியீடாக ஏதாவதொரு நல்ல நூல் வெளிக்கொணரப்பட வேண்டுமென நினைந்தோம். இந்த எமது நினைவைக் கொழும்பிலிருக்கும் கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களுடன் கலந்துரையாடினோம். அந்த உரையாடலின் பயன்தான் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய அற்புதத் திருப்பதிகங்களைப் பதிக விளக்கத்தோடு வெளியிடுவது என்று முடிபாயிற்று. பண்டிதர் அவர்கள் எந்தவித பிரதி உபகாரத்தையும் எதிர்பாராது தமக்கு நேர்ந்த பொருட் செலவையும் சிந்திக்காது இந்த அரிய பணியை நிறைவு செய்திருக்கிறார்கள். அவர் உதவிய ஆக்கத்தை மன நிறைவோடு பெற்றுக்கொண்ட நாம் எங்கள்



பொது நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் அந்தியேட்டித்தின நினைவாக அதனை வெளியிடுவதிற் பெருமகிழ்வடைகின்றோம்.

இந்த வெளியீட்டைக் கௌரவிக்கும் வகையில் தெல்லிப்பழைத் துர்க்கை அம்பாள் ஆலய முதல்வர் கலாநிதி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஒரு பிரார்த்தனை உரை வழங்கியிருக்கிறார்கள்.

இங்கிலாந்திலுள்ள எங்கள் மாமா வைத்திய கலாநிதி திரு. து. கணநாதன் அவர்கள் எங்கள் அம்மாவின் வாழ்க்கை வளம்பற்றிச் சிந்தித்துள்ளார்கள்.

எங்கள் குடும்ப நண்பரான ஓய்வுபெற்ற மின் பொறியியலாளர் திரு டபிள்யு.ஜே.பீரிஸ் அவர்கள் ஒரு இரங்கலுரை வழங்கியுள்ளார்கள்.

அட்டைப்படம் பின்னட்டைப்படம் என்பவற்றை மங்கை என்னும் இதழிலிருந்து உதவியவர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ தியாகராஜா ஆச்சாரி ரவிசங்கர் அவர்கள்.

கொழும்பு கீதா பதிப்பகத்தினர் அழகுற அச்சிட்டு எல்லோர் மனத்தையும் ஈர்க்கும் வண்ணம் செய்துள்ளார்கள்.

இவர்கள் அனைவருக்கும் தெல்லிப்பழை தலைமன்கலட்டி விநாயகர் திருவருள் நிறைவாகக் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். இவர்களை நன்றியுடன் என்றும் நினைவு கூர்வோம்.

| கணவர் | பிள்ளைகள் | மருமக்கள் |
|---|---|---|
| **தி. குலசிங்கம்** | **ந. ஜெயந்தி** | **நந்தகுமார்** |
| 27/12, Parakumpa Place, | **ஸ்ரீ. சுமதி** | **ஸ்ரீனிவாசன்** |
| Colombo-06. | **கு. ரவிசங்கர்** | **தயாரக்ஷனி** |
| SriLanka. | **கு. உதயசங்கர்** | **நகுலேஸ்வரி** |
| Tel: 2508447 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

தேவாரமுதலிகள் அருளிய திருப்பதிகங்களுள் அற்புதங்களுடனாகிய பதிகங்களைத் தனித்தவோர் வெளியீடாக்க வேண்டுமென்ற நீண்ட நாளைய ஆவல் இப்போது ஒரு பகுதியாகி நிறைவெய்துகின்றது. தெல்லிப்பழை ஆனைக்குட்டி வளவைச் சேர்ந்த திருமதி குலசிங்கம் காமாட்சிப்பிள்ளை (கமலேஸ்வரி) என்பவர் அந்தியேட்டித் தின நினைவாக ஒரு நல்ல நூல் வெளியிடவேண்டுமென்று அந்தக் குடும்ப உறுப்பினர்கள் விரும்பினர். அந்த அவர்கள் விருப்பினை நிறைவு செய்யும் வகையில் திருஞானசம்பந்தர் அருளிய அற்புதத் திருப்பதிகங்களை மட்டும் தொகுத்துப் பதிக வரலாற்றுடனும் விளக்கங்களுடனும் வெளியிடுகின்றோம்.

இந்த வெளியீட்டிற்கான பதிக விளக்கக் குறிப்புக்களை எழுதி உதவி ஊக்குவித்தவர் யாழ் பொன்னாலையைச் சேர்ந்த பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள்.

பதிகங்களுக்கான சுவாமிநாத பண்டிதர் எழுதிய மேலதிக விளக்கங்களைப் பதிவிற்குள்ளாக்கியவர் யாழ் பண்டிதர் வ. பேரின்பநாயகம் அவர்கள்.

நூலாக்கத்திற்கான பயனுள்ள கருத்துக்களை வழங்கி வழிப்படுத்தியவர் கலாபூஷணம் சித்தாந்தபண்டிதர், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்.

நூலாக்கத்திற்கான தகவல் தொகுப்பு நடுவராக உழைத்தவர் வைத்திய கலாநிதி ஸ்ரீ கார்த்திகைக்குமரன் சரவணமுத்து J.P. அவர்கள்.

கீதா பதிப்பகத்தினரின் கலைவண்ணம் என்றும் பாராட்டிற்குரியது.

இந்த ஆக்கம் பாராட்டிற்குரியதொன்றாக வெளிவர வேண்டுமென்றுழைத்த எல்லோர்க்கும் கொட்டாஞ்சேனை வரதராஜ விநாயகர் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

சி. அப்புத்துரை
மயிலங்கூடல்,
இளவாலை,
இலங்கை.

கொழும்பில்
18/1, 9th Lane,
Wasala Road,
Colombo-13.
Srilanka.

Tel : 2341083



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி

# தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்கள்

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரை

தெல்லிப்பழைப் பதி பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டது. ஆலயங்களாலும், அறிஞர்களாலும் பெருமை பெற்றது. யாழ். காங்கேசன்துறை வீதியில் ஆனைக்குட்டி வளவு பெரும் சிறப்புக்களைக் கொண்டது. கல்வியாளர்களும், பண்புள்ளம் கொண்டவர்களும் ஆனைக்குட்டி ஒழுங்கையில் வசித்து வந்துள்ளார்கள். திரு. விஜயரத்தினம்-தங்கம்மா தம்பதியினர் ஆனைக்குட்டி ஒழுங்கைக்கு ஒளிவிளக் காகத் திகழ்ந்தவர்கள். இவர்களின் திருமகளார் திருமதி காமாட்சிப் பிள்ளை (கமலேஸ்வரி) குலசிங்கம் அவர்கள் கடந்த 2004-02-11இல் இலண்டன் மாநகரில் காலமானார் என்ற செய்தி அனைவருக்கும் துயரத்தைத் தந்துள்ளது. அன்னார் கொழும்பிலும், இறுதியில் இலண்டன் மாநகரில் தமது கணவனார் திரு. குலசிங்கம், பிள்ளைகளுடனுஞ் சிறப்புற வாழ்ந்தவர். குடும்பத்தின் குலவிளக்காகிய அன்னாரின் மறைவு அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் மறைவு குறித்த நினைவு மஞ்சரி திருஞானசம்பந்தர் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள் எனும் தொகுப்பாக வெளிவரவிருக்கின்றது. இந்நன் முயற்சியைப் பொருள் செய்து முன் நிற்பவர் கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள். என் மாணவராகிய பண்டிதர் அவர்களுக்கு நன்றி கூறித், திருமதி காமாட்சிப்பிள்ளை (கமலேஸ்வரி) குலசிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## அற்புதப் பதிகங்கள் பற்றிய விபரம்


| அற்புதம் | பதிக எண் | பக்க எண் |
|---|---|---|
| 1. ஞானப்பாலுண்டமை | 01 | 01 |
| 2. பொற்றாளம் அருளியமை | 23 | 06 |
| 3. முயலகன் நோய் தீர்த்தமை | 44 | 09 |
| 4. சமணருடனான அனல் வாதத்தின் போது நெருப்பிலிடப்பட்டுப் பச்சையாகவே எடுக்கப்பட்டமை | 49 | 14 |
| 5. ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியமை | 54 | 17 |
| 6. படிக்காசு பெற்றமை | 92 | 20 |
| 7. பனிக்குளிர் காரணமான நளிர்சுரம் போக்கியமை | 116 | 23 |
| 8. யாழில் அடங்காப் பதிகம் காணல் | 136 | 26 |
| 9. வணிகன் விடந்தீர்ந்து எழுந்தமை | 154 | 31 |
| 10. வேதாரணியத்தில் ஆலயக்கதவுகளை மூடும்படி பாடியது | 173 | 34 |
| 11. என்புஞ் சாம்பருமாய பூம்பாவையை எழுப்பியமை | 183 | 37 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 12. திருநீறிட்டுப் பாண்டியன் வெப்பு நோய் தீர்த்தமை | 202 | 41 |
| 13. சிவனடியரைக் கோள்கள் எதுவுஞ் செய்ய முடியாதென்றமை | 221 | 44 |
| 14. சம்பந்தர் முத்துச்சிவிகை குடை என்பன பெற்றமை | 226 | 49 |
| 15. சம்பந்தர் பொன் முடிப்புப் பெற்றமை | 262 | 54 |
| 16. ஆற்றுப் பெருக்கை இல்லாது செய்தமை | 264 | 58 |
| 17. மந்திரங்கள் அனைத்திற்கும் ஸ்ரீபஞ்சாக்கரம் மூலம் எனல் | 280 | 61 |
| 18. சமணரை வாதில் வெல்லப்பாடியது | 305 | 64 |
| 19. யார்க்கும் ஞான மெய்ந்நெறி நமச்சிவாயவே என்றது | 307 | 67 |
| 20. மடத்திற்கு வைத்த தீயின்வெம்மை பாண்டியனை அணுகியமை. | 309 | 71 |
| 21. புனல்வாதத்தில் ஆற்று நீரை எதிர்த்த பாடல் | 312 | 74 |
| 22. நெருப்பிற் திருப்பதிக ஏடு வேகாது வந்தமை | 345 | 77 |
| 23. சமணரை வாதில் வெல்லப் பாடியமை | 366 | 80 |
| 24. திரு நல்லூர்ப் பெருமணத்திற் சோதியுட் கலந்தமை | 383 | 84 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# முதலாந் திருமுறை

## திருப்பிரமபுரம் - பண் : நட்டபாடை

## பதிகளண்: 1

திருச்சிற்றம்பலம்

தோடுடை யசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடை யசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடை யமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடை யபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 1

முற்றலா மையிள நாகமோ டேன முளைக்கொம் பவைபூண்டு
வற்றலோ டுகல னாப்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல்கேட் டலுடை யார்பெரி யார்கழல் கையாற் றொழுதேத்தப்
பெற்றமூர்ந் தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 2

நீர்பரந் தநிமிர் புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந் தவின வெள்வளை சோரவென் னுள்ளங் கவர்கள்வன்
ஊர்பரந் தவுல கின்முத லாகிய வோரூ ரிதுவென்னப்
பேர்பரந் தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே 3

விண்மகிழ்ந் தமதி லெய்தது மன்றிவி ளங்கு தலையோட்டில்
உண்மகிழ்ந் துபலி தேரிய வந்தென துள்ளங் கவர்கள்வன்
மண்மகிழ்ந் தவர வம்மலர்க் கொன்றைம லிந்த வரைமார்பிற்
பெண்மகிழ்ந் தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 4

ஒருமைபெண் மையுடை யன்சடை யன்விடை யூரும் மிவனென்ன
அருமையா கவுரை செய்யவ மர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கருமைபெற் றகடல் கொள்ளமி தந்ததோர் காலம் மிதுவென்னப்
பெருமைபெற் றபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகலந் தவொலி பாடலோ டாடல ராகி மழுவேந்தி
இறைகலந் தவின வெள்வளை சோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந் தகடி யார்பொழி னீடுயர் சோலைக் கதிர்சிந்தப்
பிறைகலந் தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 6

சடைமுயங் குபுன லன்னன லன்னெரி வீசிச் சதிர்வெய்த
உடைமுயங் குமர வோடுழி தந்தென துள்ளங் கவர்கள்வன்
கடல்முயங் குகழி சூழ்குளிர் கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமுயங் குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 7

வியரிலங் குவரை யுந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயிரிலங் கையரை யன்வலி செற்றென துள்ளங் கவர்கள்வன்
துயரிலங் கும்முல கிற்பல வூழிக டோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங் குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 8

தாணுதல் செய்திறை காணிய மாலொடு தண்டா மரையானும்
நீணுதல் செய்தொழி யந்நிமிர்ந் தானென துள்ளங் கவர்கள்வன்
வாணுதல் செய்மக ளீர்முத லாகிய வையத் தவரேத்தப்
பேணுதல் செய்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 9

புத்தரோ டுபொறி யில்சம ணும்புறங் கூற நெறிநில்லா
ஒத்தசொல் லவுல கம்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
மத்தயா னைமறு கவ்வுரி போர்த்ததோர் மாயம் மிதுவென்னப்
பித்தர்போ லும்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே 10

அருநெறி யமறை வல்லமு னியகன் பொய்கை யலர்மேய
பெருநெறி யபிர மாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
ஒருநெறி யமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் னுரைசெய்த
திருநெறி யதமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

இவ்வூர் சோழநாட்டிலுள்ளது.

இறைவன் : பிரமபுரீசர். இறைவி: திருநிலைநாயகி

திருத்தோணி இறைவன் : தோணியப்பர். இறைவி : பெரியநாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

திருஞானசம்பந்தசுவாமிகள் முதன்முதல் அருளிய இப்பதிகம் பன்னிரு திருமுறையிலும் கூட முதலாவது பதிகமாக உள்ளது. சிவபெருமானது பஞ்ச கிருத்தியத்தைக் குறிக்கும் தன்மைகூட இப்பதிக முதலாம் பாடலுக்கு உண்டு என்பர். த் + ஓ = தோ. த் = தமிழ்; ஓ = பிரணவம் என முதலாவது எழுத்துக்கே விளக்கம் உண்டு. இது மட்டுமன்றி வடமொழிக் காயத்திரிமந்திரம் கூட "த்" எனத் தொடங்கு கின்றது என்று ஒற்றுமை கூறுவர். தமிழ் மொழியிலே உள்ள தோத்திரப்பாடல்களுள் இப்பாடல் ஒருவரால் பலதரமும் பலரால் பலதரமும் ஓதப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் புதுமை குன்றாது விளங்கும் மகிமை வியக்கத்தக்கது. இவ்வுண்மை பலரால் ஏகமனதாக வரவேற்கப்படும். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலும் திருமுறையில் உள்ள ஒவ்வொரு பாடலும் "துஞ்சலில்லா வாய்மொழியால்" சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து ஓதப்படும் போது வியத்தகு நயமும் சுவையும் சிவானுக்கிரகப் பேறும் சிவானுபவமும் தரும் மகிமையுடையனவே.

இரண்டாம் பாடலில் கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்தப் பெற்றம் ஊர்ந்த என்ற தொடர் பெரியார் கைகூப்பி வணங்குமளவிலேயே சிவபெரு மான் இடபாரூடராய் வெளிப்பட்டருள்வர் என்கின்றது.

இப்பதிகத்தின் கடைசிப்பாடலில் திருநெறிய தமிழ் என்ற தொடரும் தொல்வினை தீர்தல் எளிதாமே என்ற தொடரும் கவனிக்கத்தக்கன.

திருஞானசம்பந்தசுவாமிகள் இப்பதிகத்தை மட்டுமன்றித் தம்பாடல்கள் எல்லாவற்றையும் திருநெறிய தமிழ் எனக் குறிக்கலாம் எனச் சுட்டுகின்றார் என்பர் சிலர். வினை =



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்மன் - கன்மம் என்பதைச் சஞ்சிதம் - பிராரப்தம் - ஆகாமியம் என விளக்குவர். தொல்வினை தீர்த்தல் என்றால் இங்கு மூன்றாக வகுக்கப்பட்ட வினை முழுவதும் தீரும் என்றபடி. நல்ல சத்துள்ள உணவை, பயன்தரும் தேகாப்பியா சத்தை ஒருவன் ஒரு முறைமட்டும் பெற்று நன்மையடைதல் இயலாது. தொடர்ந்து கிரமமாக இவை மேற்கொள்ளப்படுதல் அவசியமாதல் போன்று திருமுறைப்பாராயணமும் அமைய வேண்டும்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

சோழமண்டலத்திலே, பிரமபுரம் முதலிய பன்னிரண்டு திருநாமங்களையுடைய சீர்காழியிலே பிராமணகுலத்திலே, கௌணியர் கோத்திரத்திலே, சிவபாதவிருதயரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சைவசமயஸ்தாபனஞ்செய்து விபூதி சாதனத்தை விளக்குதற்குரிய ஒரு திவ்வியபுத்திரரைப் பெறல் வேண்டுமென்னும் பேராசையினாலே திருத்தோணியப்பரை நோக்கித் தவஞ்செய்தார். அத்தபோபலம்பற்றிப் பெரியநாயகி சமேதராகிய திருத்தோணியப்பருடைய பெருங்கருணை யினாலே அவர் மனைவியாராகிய பகவதியாருடைய அருமைத்திருவயிற்றிலே, திருவாதிரை நக்ஷத்திரத்திலே, ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார். அவரது மூன்றாம் ஆண்டிலே, ஒருநாள் தந்தையார் ஸ்நானத்திற்குப் போகப் பிள்ளையார் அழுதுகொண்டுபின்செல்ல அவர் ஆலயத் தினுள்ளிருக்கின்ற தீர்த்தக்கரையில் பிள்ளையாரை வைத்துவிட்டுத், தாந்தீர்த்தத்தினுள்ளே இறங்கிச் சங்கற்பம் அகமருஷண சூக்தபடன முதலியனசெய்தார். அப்போது பிள்ளையார் திருத்தோணிச் சிகரத்தைப்பார்த்து, ''அம்மே அப்பா'' எனறு அழத் தோணியப்பர் அவருக்கு அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தற்குத் திருவுளங்கொண்டு, பார்வதிதேவியாரோடு இடபாரூடராய் எழுந்தருளித், தீர்த்தக்கரையை அடைந்தனர். உமாதேவியார் தம்முடைய திருமுலைப்பாலைப் பொன் வள்ளத்திலே கறந்து, சிவஞானத்தைக் குழைத்துப் பிள்ளையாருடைய கண்ணீரைத் துடைத்துக் கையிலே கொடுத்து ஊட்ட, சிவபெருமான் அழுகைதீர்த்து அநுக்கிரகஞ் செய்தருளினார். பிள்ளையார் சிவன் சக்தி இருவராலும் ஆளப்பட்டமையினாலே ஆளுடையபிள்ளையார் என்னும் திருநாமமும், சிவஞானத்தோடு சம்பந்தஞ் செய்தலினாலே திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் திருநாமமும் உடையரா யினார்.

சிவபாதவிருதயர் சிறிதுபொழுதிலே தம்முடைய நியமங்களை முடித்துக்கொண்டு கரையிலேறி, ஆளுடைய பிள்ளையாரை நோக்கி, ''நீ யார்தந்த பாலை உண்டாய்'' என்று கோபித்து ''எச்சில் மயங்க உனக்கு இதனைத் தந்தவரைக் காட்டு'' என்று சொல்லிக் கையில் எடுத்த சிறிய ஒரு மாறுகொண்டோச்சப், பிள்ளையார் ஆனந்த பாஷ்பஞ் சொரிய, உச்சியின்மேல் எடுத்தருளிய ஒரு திருக்கைவிரலினாலே சுட்டி, ஆகாயத்திலே இடபாரூடராகி உமாதேவியாரோடும் நின்றருளிய சிவபெருமானைக்காட்டித் தம்முடையபாடல் சிவபெருமானுடைய திருச்செவியில் ஏறும் பொருட்டு முன்னர் அத்திருச்செவியையே சிறப்பித்து, வேதத்திற்கு ஆதியாகிய அக்ஷரத்தைத் தகரமெய்யோடு புணர்த்தித்''தோடுடைய செவியன் என்று பாடத் தொடங்கி யருளினார்.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோலக்கா - பண் : தக்கராகம்
## பதிக எண்: 23

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. 1

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே. 2

பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. 3

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. 4

மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய வெரித்த வெந்தைதன்
கயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. 5

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கற் றுயர மில்லையே. 7

எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைக ணீங்குமே. 8

நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே. 9

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. 10

நலங்கொள் காழி ஞான சம்பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் யோங்கி வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
இறைவன் : சந்தபுரிநாதர். இறைவி: ஓசை கொடுத்தநாயகி

## பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:

*திருஞானசம்பந்தர் திருக்கோலக்கா என்னும் தலத்தை அடைந்து தேவாரம் பாடி வணங்கும் போது கையால் தாளமிடுவதைக் கண்ட சிவபெருமான் அவர் கைகளில் நோகாவண்ணம் பொற்றாளம் அருளினார். இச் செய்தியைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'உலகவர் முன்தாளமீந்து அவன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலுக்கு இரங்கும்'' என்று குறித்துள்ளார். இத்தொடரை அவதானித்த ஒரு பெரியார் சம்பந்தர் ஞானப்பாலுண்ட அடுத்தடுத்த நாள்களில் தந்தையாருடன் திருக்கோலக்கா சென்றபோது சீர்காழியில் ஞானப்பால் வழங்கிய சிவபெருமான் திருக்கோலக்காவிலும் சம்பந்தருக்கு விசேடமாக அருள் செய்வார்; அதைத் தாமும் பார்க்கவேண்டுமென்று மற்றும் பலருடன் சென்றிருக்கிறார். அவர்கள் முன்னிலையில் சிவ பெருமான் தாளம் வழங்கியிருக்கின்றார் என்றார். இப்பதிகம் சுலபமான தாள அமைதியுடனும் சிறுவர்களும் எளிதில் பாடத்தக்கதாகவும் அமைந்துள்ளது. சிவபெருமான் சம்பந்தருக்குப் பொற்றாளம் வழங்கினார். வெண்கலத் தாளத்துக்குப்போற பொற்றாளத்துக்கு ஓசை இராது. ஆனால் சம்பந்தர் தாளம் சிறந்த ஓசையுடன் இருக்கும்படியாக அம்பிகை அனுக்கிரகித்தார். அதனால் திருக்கோலக்காவில் உள்ள அம்பிகைக்கு ஓசை கொடுத்த நாயகி என்றும் பெயர் வழங்குகின்றது. இப்பதிகத்தினை ஓதுபவர்க்குத் துன்பம் கொடுக்கவல்ல கொடியவினைகள் நீங்கும் என்பதும் பெருமையுடன் வாழ்வர் என்பதும் பெறப்படும்.

**கயப்பாக்கம் சதாசிவச்செட்டியார் பதிப்பிலுள்ள விளக்கம்:**

பிரமதீர்த்தக் கரையிலருள்பெற்ற பிற்றைஞான்று கழுமலத்துக் கலந்திருந்த தாதையையும், போதமுலை சுரந்தளித்த புண்ணியத்தாயரையும் வணங்கி விடைபெற்றுத் திருக்கோலக்கா வடைந்த திருஞான சம்பந்தப் பெருமான் இறைவன் திருக்கோலிட்டறிவரிய திருவடிகளை வணங்குமாறு 'மடையில் வாளை' என வெடுத்துக் கைந் நிறைந்த வொத்தறுத்துக் கலைப் பதிகம் பாடும்போது அதனைக் கண்டு கருணை கூர்ந்த இறைவன் தனதஞ்செழுத் தெழுதிய செம்பொற் றிருத்தாளம் அவரது திருக்கையிலுறுமா றருளினன். பிள்ளையார் அதனைத் தந்திருமுடிமேற் கொண்டு போற்றியின்னிசைப் பதிகத்தையதனைக் கொண்டு பாடித் திருக்கடைக்காப்புச் சாத்தியருளினர்.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பாச்சிலாச்சிராமம் – பண்: தக்கராகம்
## பதிகஎண்: 44

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்கடு ளங்கிவி ளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமு டித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிட மும்பலி தேர்வர்
அணிவளர் கோலமெ லாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோவிவர் மாண்பே. 1

கலைபுனை மானுரி தோலுடை யாடை
கனல்சுட ராலிவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணி மார்பர்
தம்மடி கள்ளிவ ரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
இலைபுனை வேலரோ வேழையை வாட
லிடர்செய்வ தோவிவ ரீடே. 2

வெஞ்சுட ராடுவர் துஞ்சிருண் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிட மாக
நண்ணுவர் நம்மைந யந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதைசெய்வ தோவிவர் சீரே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனமலர்க் கொன்றை யலங்கலி லங்கக்
கனறரு தூமதிக் கண்ணி
புனமலர் மாலைய ணிந்தழ காய
புநிதர்கொ லாமிவ ரென்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட
மயல்செய்வ தோவிவர் மாண்பே. 4

மாந்தர்தம் பானறு நெய்மகிழ்ந் தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தைமு ழாக்குழ றாளமொர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தைவி ழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்
சதுர்செய்வ தோவிவர் சார்வே. 5

நீறுமெய் பூசி நிறைசடை தாழ
நெற்றிக்கண் ணாலுற்று நோக்கி
ஆறது சூடி யாடர வாட்டி
யைவிரற் கோவண வாடை
பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
ஏறது வேறிய ரேழையை வாட
விடர்செய்வ தோவிவ ரீடே. 6

பொங்கிள நாகமொ ரேகவ டத்தோ
டாமைவெண் ணூல்புனை கொன்றை
கொங்கிள மாலைபு னைந்தழ காய
குழகர்கொ லாமிவ ரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர்செய்வ தோவிவர் சார்வே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவலத் தால்விச யற்கருள் செய்து
இராவண னையீட ழித்து
மூவரி லும்முத லாய்நடு வாய
மூர்த்தியை யன்றிமொ ழியாள்
யாவர்க ளும்பர வும்மெழிற் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
தேவர்க டேவரோ சேயிழை வாடச்
சிதைசெய்வ தோவிவர் சார்வே. 8

மேலது நான்முக னெய்திய தில்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனு மெய்திய தில்லை
யெனவிவர் நின்றது மல்லால்
ஆலது மாமதி தோய்பொழிற் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வ தோவிவர் பண்பே 9

நாணொடு கூடிய சாயின ரேனு
நகுவர வரிரு போதும்
ஊணொடு கூடிய வுட்குந கையா
லுரைகள வைகொள வேண்டா
ஆணொடு பெண்வடி வாயினர் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
பூணெடு மார்பரோ பூங்கொடி வாடப்
புனைசெய்வ தோவிவர் பொற்பே. 10

அகமலி யன்பொடு தொண்டர்வ ணங்க
வாச்சிரா மத்துறை கின்ற
புகைமலி மாலை புனைந்தழ காய
புனிதர்கொ லாமிவ ரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி
நற்றமிழ் ஞானசம் பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவை யேத்தச்
சாரகி லாவினை தானே. 11

திருச்சிற்றம்பலம்

இவ்வூர் சோழநாட்டிலுள்ளது

இறைவன் : மாற்றறிவரதர். இறைவி : பாலசுந்தரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

திருப்பாச்சிலாச்சிராமம் எனும் தலத்திற சிவதரிசனம் செய்யச் சென்ற திருஞானசம்பந்தர் அங்கு நோயுற்று மயங்கிய ஒரு இளம் பெண்ணைக் கண்டார். அவள் பற்றி விசாரித்தார். அந்நாட்டு மன்னனான கொல்லிமழவன் என் பானின் மகள் அவள் என்பதையும் வைத்திய முயற்சிகளால் தீராத வியாதியையுடைய அவளை சிவசந்நிதானத்தில் வைத்திருக்கின்றனர் என்பதையும் அறிந்தார். அப்பெண்ணின் தீ்ராதநோய் தீர அருள்புரியும் வண்ணம் இறைவனை வேண் டிப் பாடியருளிய பதிகம் இது. இப்பதிகத்தினைப் பாடித் திருஞானசம்பந்தர் துதித்த உடனே அவள் நோய் நீங்கப் பெற்றாள் என்பது வரலாறு.

இச்செய்தி திருஞான சம்பந்தர் பெருமையினையும் அவர் தேவார மகிமையினையும் வெளிப்படுத்துவதோடு ஆலய வழிபாடு செய்யச் செல்வோர் துன்புறுபவர்க்கு இரங்க வேண்டும். துன்புறுவோர் பொருட்டு இரங்கிச் சிவ பெருமா னைத் துதிக்க வேண்டும் என்னும் உண்மைகளையும் போதிக்கின்றது. இன்றும் நோயால் துன்புறும் பலர் இப் பதிகத்தைத் தொடர்ந்து பாராயணம் செயது நோய் நீங்கப் பெறுகின்றனர். இப்பதிகத்திற சிவபெருமான் பூதங்களுடன் விளங்குபவர் என்பது இரண்டு மூன்றிடங்களில் கூறப்பட் டுள்ளதை அவதானிக்கமுடிகின்றது.

தீரா நோய்கள் கர்மவினைகள் காரணமாகவரும் நோய்கள் அதாவது சுகாதாரக்கேடு வறுமை முதலிய காரணங்களாலன்றி வரும் நோய்களுக்காக மருந்துண்பவர் ஆலய வழிபாடு புனிதச்சேத்திர வாசம் என்பவற்றை மேற் கொண்டு மருந்துண்ண வேண்டும் என்னும் கருத்தை ஆறு முகநாவலர் பெருமான் நான்காம் பாலபாடத்தில் வலியுறுத்தி யுள்ளமை இங்கு ஒப்புநோக்கி விளங்கத்தகும்.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காவேரிக்கு வட பால் மேற்றிசை நோக்கிச் சென்று திருப்புள்ளிருக்கு வேளுர், திருநின்றியூர், திருநீடுர் முதலிய தலங்கடோறும் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடிக் கொண்டு, பின் மழநாட்டிலே காவேரிக்கு வடகரையே சென்று, திப்பாச்சிலாச்சிராமத்துக்குச் சமீபிக்கு முன், அந் நகரத்திலே கொல்லி மழவன் தன்னுடைய புத்திரி முயலக னென்னும் நோயினால் வருந்துதலைக் கண்டு கவலையுற்று வேறொரு பரிசினாலும் நீங்காமை கண்டு, அவளைத் திருக் கோயிலினுள்ளே கொண்டுபோய்ச் சுவாமி சந்நிதானத்திலே இட்டு வைத்தான். பிள்ளையார் திருக்கோயிற் கோபுரத்துக்குச் சமீபித்தவுடனே, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, உள்ளே பிரவேசித்து, வலஞ்செய்து கொண்டு, சந்நிதானத்திலே போனார். போனபொழுது, அறிவுகெட்டு நிலத்திலே கிடக் கின்ற கன்னியைக்கண்டு, ''இ்.தென்னை'' என்று வினாவ, மழவன் வணங்கி நின்று, ''இவள அடியேனுடைய புத்திரி, இவள் முயலகனென்னும் நோயினால் மிக வருந்துகின்ற மையால் இவளைச் சுவாமிசந்நிதானத்திலே கொணர் வித்தேன்'' என்று விண்ணப்பஞ் செய்தான். பிள்ளையார் அதைக் கேட்டு, அருள் சுரந்து, அவ்விடத்தில் நின்றே சுவாமியை நமஸ்கரித்து, அவளுடைய நோயை நீக்கும் பொருட்டுத், ''துணிவளர் திங்கள்'' என்றெடுத்து, ''மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல்செய்வ தோவிவர் மாண்பே'' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அப்பொழுது அந்தக்கன்னி நோய் நீங்கி, எழுந்து ஒல்கிவந்து, தந்தையின்பக்கத்தை அடைந்தாள். அது கண்ட மழவன் மிகுந்த மகிழ்ச்சி கொண்டு, அவளோடும் பிள்ளையாரை விழுந்து நமஸ்கரித்தான், பிள்ளையார் அங்கே சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, சிலநாள் எழுந்தருளியிருந்தார். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநள்ளாறு பண்: பழந்தக்கராகம்
## பதிக எண்: 49

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையா டன்னோடும்பொன் னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள்ளேற் றண்ணல்பர மேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவணவா டையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயதுநள் ளாறே. 1

தோடுடைய காதுடையன் றோலுடையன் றொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர்பா லுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயதுநள் ளாறே. 2

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடியணி யிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர்பணிந் தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும்பற் றியகை
நான்மறையா னம்பெருமான் மேயதுநள் ளாறே. 3

புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல்பெய் தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாதநிழற் சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயதுநள் ளாறே. 4

ஏறுதாங்கி யூர்திபேணி யேர்கொளிள மதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோ ராடரவஞ் சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பினிரை கொன்றை
நாறுதாங்கு நம்பெருமான் மேயதுநள் ளாறே. 5

திங்களுச்சி மேல்விளங்குந் தேவனிமை யோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவ னென்றடியே யிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடியார் கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயதுநள் ளாறே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி விண்கொண்முழ வதிர
அஞ்சிடத்தோ ராடல்பாடல் பேணுவதன் றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித் திகழ்தருகண் டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயதுநள் ளாறே. 7

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத்தீ யம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ றாடுவதன் றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பால்மதியஞ் சூடி
நட்டமாடு நம்பெருமான் மேயதுநள் ளாறே. 8

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணனீழ லாரழல்போ லுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்கவலித் திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயதுநள் ளாறே. 9

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர்குண மிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறிசெல் லேன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதிளும் முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயதுநள் ளாறே. 10

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கியதாழ் சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்பந் தனல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்துமிவை வல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகிலுறை வாரே. 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*திருநள்ளாறு எனும் தலத்தில் வழிபாடு செய்தபோது திருஞானசம்பந்தசுவாமிகள் அருளியது இப்பதிகம். பாண்டிநாட்டிற் சமணர்களுடன் அனல்வாதம் செய்தபோது அங்கு அமைந்த நெருப்பிலே எரியாமல் இருக்கும்படி இப்பதிகத்தைச் சம்பந்தசுவாமிகள் நெருப்பிலிட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பில் எரியாமல் இருந்த காரணத்தால் இப்பதிகத்துக்குப் பச்சைப்பதிகம் எனவும் ஒரு பெயருண்டு.

திருநள்ளாறு என்னும் தலம் நளமகாராசன் சனிக்கிரக பீடை நீங்கப்பெற்ற தலமாகும். தமிழுக்கும் சைவத்துக்கும் சனிக்கிரக பீடை போலிருந்த சமணரை வெல்ல இப்பதிகம் உதவியது. சனிக்கிரக பீடை உள்ளவர் இப்பதிகத்தை விசேசமாகப் பாராயணம் செய்து நலம் பெறலாம் என்பதை உணர்த்துவதாக இது உள்ளது.

**கயப்பாக்கம் சதாசிவச்செட்டியார் பதிப்பிலுள்ள விளக்கம்:**

தோணிபுரத் தோன்றலாகிய பிள்ளையார் திருத்தரும புரத்தை வழிபட்டுத் திருநள்ளாற்றையடைந்து இறைவனை வணங்கி உருகிய அன்புறு காதலினாலுள்ளுருகிப் பொருவில் திருப்பதிகம் 'போகமார்த்த பூண்முலையாள்' என்றெடுத்துப் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி வெளிவந்து திருநீலகண்டப் பெரும்பாணரை யதனை யாழிலிட்டு வாசிக்குமாறு செய்தும், தாம் தாளங்கொடு பாடியும், எல்லோரையும் மகிழ்வித்தருளினார். இத்திருப்பதிகமே மதுரையிற் பாண்டியன தவைக்களத்தே சமணரோடு வாதஞ் செய்யும்போழ்து அனல் வாதத்தின் பொருட்டுப் பிள்ளையார் திருமுறையிற் கயிறு சாத்தியபோது வரநேர்ந்தது. அவ்வேட்டைப் பிள்ளையார் கையிலெடுத்துச் சிவபெருமானே பரம்பொருளென்ப துண்மை யாயின் இத்திருவேடு நெருப்பில் வேகாதிருக்கக்கடவதெனத் திருநள்ளாற்றை நோக்கித் 'தளிரிள வளரொளி' என்னும் திருப்பதிகம் பாடித் தீயிலிட்டுக் குறித்த நேரத்திற்குப் பின் பச்சையாக வெடுத்து அவையினரெல்லோருங் காணக் காட்டித் திருமுறையில் கோத்தருளினார். இதனால் இது பச்சைத் திருப்பதிகமென வழங்கப்பெறும். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவோத்தூர் – பண்: பழந்தக்கராகம்
## பதிக எண்:54

திருச்சிற்றம்பலம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. 1

இடையீர் போகா விளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரேயும தாளே. 2

உள்வேர் போல நொடிமையி னார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே. 3

தோட்டீ ரேதுத்தி யைந்தலை நாகத்தை
ஆட்டீ ரேயடி யார்வினை
ஓட்டீ ரேயும்மை யேத்துது மோத்தூர்
நாட்டீ ரேயருள் நல்குமே. 4

குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்
அழையா மேயரு ணல்குமே. 5

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீரென்
றுட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கீ ரேயரு ணல்குமே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா வென்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயரு ணல்குமே. 7

என்றா னிம்மலை யென்ற வரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதி லெய்தவ னோத்தூர்
என்றார் மேல்வினை யேகுமே. 8

நன்றா நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந்தி சையெலாம்
ஒன்றா யொள்ளெரி யாய்மிக வோத்தூர்
நின்றீ ரேயுமை நேடியே. 9

கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பாலெயி லெய்தவ னோத்தூர்ச்
சீர வன்கழல் சேர்மினே. 10

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம் பந்தன்சொல்
விரும்பு வார்வினை வீடே. 11

திருச்சிற்றம்பலம்

இத்தலம் தொண்டை நாட்டிலுள்ளது
இறைவன் : வேதநாதர். இறைவி: இளமுலைநாயகி

## பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:

*திருவோத்தூரில் திருஞானசம்பந்தர் சுவாமிதரிசனம் செய்து தங்கியபோது அங்கு வாழ்ந்த சிவநேயர் ஒருவர் சிவ புண்ணியத்துக்குப் பயன்படுமாறு அமைத்த பனந் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களும் ஆண்பனைகளாய்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக பயன் உண்டாக்காதனவாய் இருந்தன. இத் தன்மையை அவ்வூரில் வாழ்ந்த சமணர் பரிகசித்தனர். பரிகாசத்தைப் பொறாத அந்த அன்பர் தம் நிலையைத் திருஞானசம்பந்தருக்குத் தெரிவித்தார். அந்த அன்பரின் குறையைப் போக்கத் திருவுளம் கொண்ட சம்பந்தர் ஆண்பனைகள் பெண்பனைகளாக வேண்டிப்பாடியது இப்பதிகம்.

திருஞானசம்பந்தரின் வாக்கில் குறிப்பிடப்பட்ட மகிமை யால் அந்தமரங்களெல்லாம் கடைசியில் சிவப்பேற்றையே அடைந்தன என்பர் சேக்கிழார்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளையார், சிதம்பரமுதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, தொண்டைநாட்டை அடைந்து அங்கே திருவோத்தூரிற் சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு எழுந்தருளியிருக்குநாளிலே, அந்தத் தலத்திலுள்ள சிவனடியார் ஒருவர் பிள்ளையாரை வணங்கி நின்று, ''சிவபெருமானுக்கு அடியேன் ஆக்கும் பனைக ளெல்லாம் மிக உயர்வாக வளர்ந்தும், ஆண்பனைகளாகிக காயாவாயின. அதுகண்ட சமணர்கள், ''நீர் ஆக்கும் ஆண் பனைகளெல்லாவற்றையும் காய்க்கப் பண்ணுதல் கூடுமோ'' என்று நகைசெய்து இகழ்கின்றனர்'' என்று விண்ணப்பஞ் செய்யப் பிள்ளையார் அதுகேட்டுப் பரிந்தருளி, எழுந்து விரைந்து திருக்கோயிலினிற் சென்று, சுவாமியை வணங்கிப், ''பூத்தேர்ந்தாயன'' என்னுந் திருப்பதிகம் பாடி அதன் திருக் கடைக்காப்பிலே, ''குரும்பை யாண்பனையீன்குலை யோத் தூர்'' என்று அருளிச் செய்தார். உடனே ஆண்பனைக ளெல்லாம் குரும்பைகளை யுடையனவாய்ப் பெண்பனை களாயின.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவீழிமிழலை – திருவிருக்குக்குறள் பண்: குறிஞ்சி
## பதிகஎண்: 92

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே. 1

இறைவ ராயினீர், மறைகொண் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே. 2

செய்ய மேனியீர், மெய்கொண் மிழலையீர்
பைகொ ளரவினீர், உய்ய நல்குமே. 3

நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறு மிழலையீர், பேறு மருளுமே. 4

காமன் வேவதோர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேம நல்குமே. 5

பிணிகொள் சடையினீர், மணிகொண் மிடறினீர்
அணிகொண் மிழலையீர், பணிகொண் டருளுமே. 6

மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே. 7

அரக்க னெரிதர, இரக்க மெய்தினீர்
பரக்கு மிழலையீர், கரக்கை தவிர்மினே 8

அயனு மாலுமாய், முயலு முடியினீர்
பரக்கு மிழலையீர், பயனு மருளுமே. 9

பறிகொ டலையினார், அறிவ தறிகிலார்
வெறிகொண் மிழலையீர், பிறிவ தரியதே 10

காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழு மொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

சிவபெருமான் திருவீழிமிழலையில் திருஞானசம்பந் தருக்கும் திருநாவுக்கரசருக்கும் படிக்காசு வழங்கியரு ளினார். அதில் திருஞானசம்பந்தருக்கு வழங்கிய காசு வாசி = குற்றம் உடைய காசாக இருந்ததினால் அடியார்க்கு உணவு வழங்கல் தாமதித்தது. இதையறிந்த ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடற்பணியுடன் உழவாரப் பணியும் செய்வ தால் அவருக்குச் சிவபெருமான் நல்லபொற்காசு கொடுத் திருக்கிறார். எனக்கும் நல்ல காசு தரும்படி நானும் வேண்டு வேன் என்று கூறிப்பாடியருளியது இப்பதிகம். வாசி என்றால் வட்டம் என்றும் குற்றம் என்றும் கூறுவர். ஆனால் இதுபற்றி அப்பர் சுவாமிகள் திருக்குறுந்தொகையில் ''பாடிப்பெற்ற பழங்காசு'' என்று குறித்துள்ளமை கவனிக்கத்தக்கது. பெருமையற்ற முறையிலும் குறைவாகவும் பொருட் பேறுடையவர்கள் இப்பதிக பாராயணத்தால் நலம் பெறலாம்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

ஆளுடையபிள்ளையார் அப்பமூர்த்தியோடும் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு திருவீழிமிழலையில் இருக்கு நாளிலே, மழையின்மையாலும் காவேரிப்பெருக்கு இன்மை யாலும் பஞ்சம் உண்டாக, அதனால் உயிர்களெல்லாம் வருத்தமுற்றன. சிவனடியார்களையும் பசிநோய் வருத்திற்று. அது கண்டு, பாலறாவாயராகிய பிள்ளையாரும் அப்ப மூர்த்தியும் ''சிவபெருமானது விபூதியைத் தரித்த அடியார் களுக்கும் கவலை வருமோ'' எனத் திருவுளமிரங்கிப் பரம சிவனுடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு, அன்றிரவு துயின்றார்கள். துயிலும்போது, பரமசிவன் அவ்விருவருக்கும் சொப்பனத்திலே தோன்றிக் ''காலபேதத்தினாலே நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும், உங்களை வழிபடுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்களுடைய வருத்தத்தை நீக்கும்பொருட்டு, இப்பஞ்சம் நீங்கும்வரைக்கும் நாம் தினந்தோறும் திருக்கோயிலின் கிழக்குப்பீடத்திலும் மேற்குப்பீடத்திலும் ஒவ்வொரு காசு உங்களுக்குத்தருகின்றோம்'' என்று சொல்லி, மறைந்தருளினார். பிள்ளையார் விழித்தெழுந்து, திருவருளைத் துதித்து அப்பமூர்த்தியோடு திருக்கோவிலிற் புகுந்த போது கிழக்குப் பீடத்திலே காசு இருத்தலைக் கண்டு, விருப்பத்தோடுந் தொழுது, அதனை எடுத்து, ''நாடோறும் சிவனடியார்களெல்லாரும் வந்து, ''அமுது செய்யக் கடவர்கள்'' என்று இரண்டு காலங்களிலும் பறைசாற்றித் தெரிவித்துத் தம்முடைய திருமடத்தில் வரும் அடியார்களுக்குக் கறி நெய் பால் தயிரோடு அன்னம் இட்டுக்கொண்டிருந்தார். அப்பமூர்த்தியும் மேற்குப்பீடத்தில் வைக்கப்படும் காசை எடுத்து, அப்படியே அடியார்களைத் திருவமுது செய்வித்தார். இப்படி நிகழுநாளிலே, பிள்ளையார், அப்பமூர்த்தியுடைய திருமடத்திலே அடியார்கள் காலம்பெறத் திருவமுது செய்தலைக் கண்டு, தம்முடைய திருமடத்திற் பாகுகர்களை நோக்கி, ''நீங்கள் காலம்பெற அமுது பாகம் பண்ணி இங்கே வரும் அடியார்களுக்குக் கொடாமைக்குக் காரணம் யார்' என்று வினாவியருளினார். பாகுகர்கள் பாலறாவாயரை வணங்கி நின்று, ''சுவாமி! தேவரீர் கடவுளிடத்திற் பெறும் படிக்காசைத் தினந்தோறும் பண்டம் வாங்குதற்குக் கொண்டு போனால் அதற்கு வாசி கேட்கின்றார்கள். அப்பமூர்த்தி பெற்ற காசையோ வாசியின்றி ஏற்றுக் கொள்கின்றார்கள். இதனாலே காலந்தாழ்கின்றது'' என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு, அப்பமூர்த்தி கைத்தொண்டு செய்ததால் அவர் பெறுங்காசு வட்டமின்றி ஏற்கப்படுகின்றது என்று சிந்தித்து, ''இனி வரும் நாட்களிலே தருங்காசு வாசிதீரும் பொருட்டுப் பாடுவேன்'' எனத் திருவுளங்கொண்டார். மற்ற நாள் திருக்கோயிலிலே புகுந்து பரமசிவனை வணங்கி, ''வாசி தீரவே - காசு நல்குவீர்- மாசின் மிழலையீர்- ஏசலில்லையே'' என்னுந் திருப்பதிகம்பாடி நற்காசு பெற்றார். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீலகண்டம் பொது - பண் : வியாழக்குறிஞ்சி
## பதிகஎண்:116

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 1

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரன் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 2

முலைத்தட மூழ்கிய போகங் களுமற் றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு மழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 3

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 4

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 5

மறக்கு மனத்தினை மாற்றியெம் மாவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றதிரு நீலகண்டம். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - 7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துது நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 8

நாற்ற மலர்மிசை நான்முக னாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய வடியு முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குது நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 9

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றதிரு நீலகண்டம் 10

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*திருஞானசம்பந்தசுவாமிகளுடனுறைதல் தலயாத்திரை செய்தல் ஆகியபேறு பெற்ற அடியார்கள் கொடிமாடச் செங்குன்றூர் எனும் தலத்தில் தங்கியிருந்த போது நளிர்சுரம் எனும் நோய் துன்புறுத்தியது. அந்தவேளையில் அந்த நாட்டிலுள்ளவர்களைப் பீடிக்கும் அந்த நோய் நீங்கச் சம்பந்தர் அருளியது இப்பதிகம். இப்பதிகம் பாடி வேண்டுதல் செய்தவுடன் அந்த அடியார்களுக்கு மட்டுமன்றி அந்த நாட்டவர்களுக்குமே நோய் நீங்கியது என்பது வரலாறு.*

*தேவர்களுக்கு வந்த துன்பமாகிய கொடிய நஞ்சைச் சிவபெருமான் தனது கண்டத்துள் அடக்கித் தேவர்களைப்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்தார். தேவர்களின் துன்பம் நீங்கக் காரணமாக இருந்த அத் திருநீல கண்டத்தின் மீது ஆணையாக நமக்குத் தீவினைப்பயன் வரலாகாது என்ற கருத்தில் இப்பதிகம் அமைந்துள்ளது.

இப்பதிகத்தின் முதலாம் பாடல் மூலம் மக்களைப் பார்த்து நாம் சிவதொண்டு சிவபூசை செய்பவராதலால் திருநீல கண்டத்தின் மீதாணையாக நமக்குத் தீவினை பொருந்தாது என்ற கருத்தைச் சம்பந்தசுவாமிகள் கூறு கின்றார்.

சிவபெருமானே, நாம் உம் அடியவர்கள்; ஆதலால் திருநீலக்கண்டத்தின் மீது ஆணையாக நமக்குத் தீவினைப் பயன் பொருந்தலாகாது என்று சம்பந்தசுவாமிகளின் ஏனைய திருப்பாடல்கள கூறுவதாக அமைந்துள்ளன. சிவ பெருமானை முன்னிலைப் படுத்தி அமைந்த பாடல்கள் தோத்திரம் செய்ய மிகவாய்ப்பானவை.

இப்பதிகத்தின் முதலாம் பாடல் ஒரு கோணத்திலும் ஏனைய பாடல்கள் வேறு கோணத்திலும் வேறுபல திரு முறைப் பாடல்கள் தத்தமக்கு உரிய அமைப்பிலும் சிவனருளால் சிவப்பணியால் தீவினைப்பயனை விலக்கலாம் என்ற கருத்தில் அமைந்துள்ளவை. சிந்தனைத் தெளிவுக்கு உரியன.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருக்கொடிமாடச் செங்குன்றூரை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டி ருக்குநாளிலே, மழைக்காலம் நீங்கிப் பனிக்காலம்வரக் குளிர்மிகுந்ததினால் பிள்ளையாருடைய பரிசனங்கள் நளிர் சுரத்தினால் வருத்தமுற்றுப் பிள்ளையாரை வணங்கி விண் ணப்பஞ்செய்யப் பிள்ளையார் ‘‘அவ்வினைக்கிவ்வினை’’ என்னுந் திருநீலகண்டத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே அக்கொங்கநாடு முழுதும் பனிப்பிணி தீர்ந்தது. ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தருமபுரம் – யாழ்மூரி
## பதிக எண்: 136

திருச்சிற்றம்பலம்

மாதர் மடப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூத வினப்படைநின் றிசை பாடவு மாடுவ
ரவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேத மொடேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாத விழ்புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே. 1

பொங்குந டைப்புகலில் விடை யாமவ ரூர்திவெண்
பொடி யணி தடங் கொண்மார் புபூணநூல் புரள
மங்கு லிடைத்தவழும் மதி சூடுவ ராடுவர்
வளங் கிளர் புன லர வம்வைகிய சடையர்
சங்கு கடற்றிரையா லுதை யுண்டுச ரிந்திரிந்
தொசிந் தசைந் திசைந் துசே ரும்வெண்மணற் குவைமேல்
தங்கு கதிர்ம்மணிநித் தில மெல்லிரு ளொல்கநின்
றிலங் கொளிந் நலங் கெழிற் றருமபு ரம்பதியே. 2

விண்ணு றுமால்வரைபோல் விடை யேறுவ ராறுசூ
டுவர் விரி சுரி யொளி கொடோடு நின்றிலங்கக்
கண்ணு றநின்றொளிருங் கதிர் வெண்மதிக் கண்ணியர்
கழிந் தவ ரிழிந் திடும் முடைதலை கலனாப்
பெண்ணு றநின் றவர்தம் முரு வம்மயன் மாறொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணி தழ்முல்லையொடெண் ணிதழ் மௌவன்ம ருங்கலர்
கருங் கழிந் நெடுங் குந றருமபு ரம்பதியே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரு றுமென்முலைநன் னுத லேழையொ டாடுவர்
வளங் கிளர் விளங் குதிங் கள்வைகிய சடையர்
காரு றநின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்
பாரு றவிண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தாரு றுநல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழை பொழின் மழைந் நுழை தருமபு ரம்பதியே. 4

நேரு மவர்க்குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதொர் நிலையர்
பேரு மவர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவ ருட றடர்த் தபெற்றியா ரறிவார்
ஆர மவர்க்கழல்வா யதொர் நாகம ழ்ஃகுறவ்
வெழுஃ கொழும் மலர் கொள்பொன் னிதழிநல் லலங்கல்
தார மவர்க்கிமவான் மக ளூர்வது போர்விடை
கடி படு செடி பொழி றருமபு ரம்பதியே. 5

கூழை யங்கோதைகுலா யவ டம்பிணை புல்கமல்
குமென் முலைப் பொறி கொள்பொற் கொடியிடைத் துவர்வாய்
மாழை யொண்கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
வலம் மலி படை விடை கொடிகொடும் மழுவ்வாள்
யாழை யும்மெள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறஃ கறை யுறந்நறவ்வி ரியுந்நல்
தாழை யுஞாழலுந்நீ டிய கானலி ளள்ளலி
சைபுள் ளினந் துயில் பயி றருமபு ரம்பதியே. 6

தேம ருவார்குழலன் னந டைப்பெடை மான்விழித்
திருந் திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூம ருசெஞ்சடையிற் றுதை வெண்மதி துன்றுகொன்
றைதொல் புனல் சிரங் கரந் துரித்ததோ லுடையர்
காம ருதண்கழிநீ டிய கானல கண்டகங்
கடல் லடை கழி யிழி யமுண்டகத் தயலே
தாம ரைசேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயற் றருமபு ரம்பதியே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூவ ணநீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர் வரை புரை திரள்புயம் மணிவர்
கோவ ணமும்முழையின் னத ளும்முடை யாடையர்
கொலைம் மலி படை யொர்சூ லமேந்திய குழகர்
பாவ ணமாவலறத் தலை பத்துடை யவ்வரக்
கனவ் வலி யொர்கவ் வைசெய் தருள்புரி தலைவர்
தான ணவேறுடையெம் மடி கட்கிடம் வன்றடங்
கடல் லிடுந் தடங் கரைத் தருமபு ரம்பதியே. 8

வார்ம லிமென்முலைமா தொரு பாகம தாகுவர்
வளங் கிளர் மதி யர வம்வைகிய சடையர்
கூர்ம லிசூலமும்வெண் மழு வும்மவர் வெல்படை
குனி சிலை தனிம் மலை யதேந்திய குழகர்
ஆர்ம லியாழிகொள்செல் வனு மல்லிகொ டாமரைம்
மிசை யவன் னடிம் முடி யளவுதா னறியார்
தார்ம லிகொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங் கடல் லிடுந் திரை தருமபு ரம்பதியே. 9

புத்தர் கடத்துவர் மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழி வில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
பத்தர் களத்தவமெய்ப் பய னாகவு கந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்த னவெண்ணகையொண் மலை மாதுமை பொன்னணி
புணர்ம் முலை யிணை துணை யணைவதும் பிரியார்
தத்த ருவித்திரளுந் திய மால்கட லோதம்வந்
தடர்ந் திடும் தடம் பொழி றருமபு ரம்பதியே. 10

பொன்னெ டுநன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொரூஉ புன றிரூஉ வமர் புகலியென் றுலகில்
தன்னொ டுநேர்பிறவில் பதி ஞானசம் பந்தன.்.
துசெந் தமிழ்த் தடங் கடற் றரும புரம்பதியைப்
பின்னெ டுவார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னெ டுநன் னுலகெய் துவ ரெய்திய போகமும்
முறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே. 11

திருச்சிற்றம்பலம்

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

இறைவன் : யாழ் முரிநாதர். இறைவி: மதுரமின்னம்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

திருஞானசம்பந்தசுவாமிகளின் திருப்பதிகங்களைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழிலிட்டுவாசிப்பதால் திருப் பதிகங்கட்குச் சிறப்பு உண்டாகின்ற தெனத் திருநீலகண்டரின் தாய்வழி உறவினர் கூறக்கேட்டு அஞ்சிய யாழ்ப்பாணரின் விருப்பப்படி யாழிலடங்காத தன்மையுடையதாகத் திரு ஞானசம்பந்த சுவாமிகள் அருளியது இப்பதிகம்.

அழகிய சிறிய முல்லைப்பூக்களால் மாலைகட்டுவது போல் நல்ல இழகிய சிறிய சொற்களைத் தேர்ந்தெடுத்துச் சம்பந்த சுவாமிகள் இப்பதிகத்தை அருளியுள்ளார் என ஒரு பெரியவர் புகழ்ந்ததற்கு அமைவாக இப்பதிகம் சிறு சிறு சொற்களால் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்க. யாழில் இப்பதிகம் அடங்காமை கண்டு பாணர் யாழை முரிக்க முற்பட்டார். அதைத்தடுத்து யாழைத்தம் திருக்கரத்தில் சம்பந்தர் பெற்றார். பின் யாழிலடங்காச் சிவபரம் பொருளின் இயல்பைக் கூறிச் சிவப்புகழை இயன்ற அளவில் யாழில் வாசிப்பதே முறை என்று அறிவுறுத்திச் சம்பந்தர் யாழைப் பாணர் கையிற் கொடுத்தார். இவ்வளவும் நாடகக் காட்சி போன்றவை. தமிழ் இயலாய் இசையாய் நாடகமாய் விளங்குபவர் சம்பந்தர் என ஒரு கோணத்தில் புனைந்துரைத்துள்ளார் பண்டிதமணி சி.க. அவர்கள.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவாவடுதுறையை அகன்று, திருக்கோழம்பம் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு, திருத்தருமபுரத்தை அடைந்தார். அந்தத் திருத் தருமபுரம் திருநீலகண்டப் பெரும்பாணருடைய தாயார் பிறந்த தலமாதலால், அங்குள்ள அவருடைய சுற்றத்தார்கள் வந்து எதிர்கொண்டு வணங்கித் துதித்தார்கள். அதுகண்டு, திருநீலகண்டப் பெரும்பாணர், பிள்ளையார் அருளிச்செய்த அருமையாகிய திருப்பதிகங்களின் இசையைத் தாம் யாழில் இட்டு வாசிக்கப்பெற்ற பெரும்பேற்றை அவர்களுக்கு அருளிச் செய்தார். அவர்கள் அதைக்கேட்டு, ''நீர் திருப்பதிகவிசையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுபெற யாழிலே அமைத்து வாசித்தலினாலே உலக முழுதிலும் இசை விளங்குக'' என்றார்கள். உடனே பெரும்பாணர் மனநடுங்கிப் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி நின்று, ''சுவாமீ, திருப்பதிகவிசை அளவுபடாத தன்மையை இவர்களேயன்றி உலகத்திலுள்ள மற்றை யாவரும் அறிந்து உண்மையை உணர்ந்து உய்யும் பொருட்டுத் தேவரீர் ஒரு திருப்பதிகம் பாடியருளுவீராகில், அடியேன் அதனிசை யாழிலே அடங்காமையைக் காட்டப் பெறுவேன்'' என்றார். அப்பொழுது பிள்ளையார் சிவபிரானை வணங்கிக்கொண்டு திருப்பதிகத்தின் உண்மை பூமியிலுள் ளோருடைய கண்டத்திலும் யாழிலும் இசைநூலிற் கூறப்பட்ட இசை முயற்சிகளினால் அடங்காமையைக் காட்டும்பொருட்டு, ''மாதர் மடப்பிடி'' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளி னார். திருநீலகண்டப் பெரும்பாணர் அத்திருப்பதிகவிசை யைத் தம்முடைய யாழ்நரம்பிலே முன் போல இட்டு வாசிக் கப்புக அது அதனிடத்தே அடங்கிற் றில்லை. அப்பொழுது திருநீலகண்டப்பெரும்பாணர், அதனை விட்டு அச்சங்கொண்டு பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து ''சுவாமி அருளிச்செய்த திருப்பதிகத்தினிசையை யாழிலே ஏற்பேன் என்று சொல்லப் பண்ணியது இந்த யாழன்றோ'' என்று அதனை உடைக்கும் படி ஓங்கினார். உடனே பிள்ளையார் தடுத்தருளி ''ஐயரே நீர் இந்த யாழை முரிப்பது என்னை! சிவபெருமானும் உமாதேவியாரும் அருளிச்செய்த திருவருளின் பெருமையெல்லாம் இந்தக் கருவியில் அளவுபடுமோ! மனசினாலும் அளவுபடாத இசைப் பெருமை செய்கையினால் அளவு படுமோ! அளவுபடாதே! நீர் இந்த யாழைக்கொண்டே சுவாமியுடைய திருப்பதிக விசையை இயன்ற மட்டும் இதில் அமைத்து வாசியும்'' என்று சொல்லித் திருநீலகண்டப் பெரும்பாணர் கையிலே யாழைக்கொடுத்தருளினார். பெரும்பாணர், பிள்ளையாரைத் தொழுது, யாழைவாங்கிச் சிரமேற்கொண்டார்.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாந்திருமுறை

## திருமருகல் பண்: இந்தளம்
## பதிக எண்:154

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே 1

சிந்தாயெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமான் முதல்வா வெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ விவளே சறவே 2

அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே 3

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகன் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே 4

துணிநீ லவண்ணம் முகிறோன் றியன்ன
மணிநீ லகண்டம் முடையாய் மருகல்
கணிநீ லவண்டார் குழலா ளிவடன்
அணிநீ லவொண்கண் ணயர்வாக் கினையே. 5

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ வடியா ளிவளே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவா ணினைவா ளிரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவா ளிவளைத் துயராக் கினையே 7

இலங்கைக் கிறைவன் விலங்கல் லெடுப்பத்
துலங்கவ் விரலூன் றலுந்தோன் றலனாய்
வலங்கொண் மதிள்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் லிவளை யலராக் கினையே 8

எரியார் சடையும் மடியும் மிருவர்
தெரியா ததொர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியா ளிவளை யயர்வாக் கினையே 9

அறிவில் சமணும் மலர்சாக் கியரும்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே 10

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*திருமருகல் எனும் தலத்துக்குத் திருஞானசம்பந்த சுவாமிகள் சென்றபோது ஒரு பெண்ணின் புலம்பலைக் கேட்டு இரங்கி அவளுக்கு ஆறுதல் கூறி விசாரித்தார். அவள் திருமணம் செய்ய இருந்தவன் பாம்பு கடித்து இறந்தான் என்பதை அறிந்து இறந்தவன் உயிர்பெற வேண்டுமெனச் சிவபெருமானுக்கு முறையிட்டுப்பாடிய பதிகம் இது. திருமணம் நிகழவேண்டுமென விரும்புவோர் இப் பதிகத்தைப்பாராயணம் செய்வது வழக்கமாக உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெண் கணவனை இழந்து புலம்பிய பின் ஆலயக் கோபுரத்தைப் பார்த்துச் சிவபெருமானை முன்னிட்டுப் புலம் பினாள் என்பதும் ஆலயவழிபாடு செய்யச் சென்ற சம்பந்தர் இவ்வாறு துன்புறுபவரின் கவலையை நீக்கிய பின்பே சுவாமி தரிசனம் செய்ய எண்ணினார் என்பதும் நம் கவனத்துக்குத் தேவையானவை.

திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டிற் சைவசமயத்தை நிலை நிறுத்தினார் என்று பார்ப்பது போல் திருமருகலில் சைவமகள் ஒருத்தியின இல்வாழ்வுக்கு உதவினார் என்பதை யும் பார்த்தால் சைவசமயத்திற் சமூக சேவை உண்டு என்பதைத் தெளியமுடியும்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருச்செங்காட்டங் குடியினின்று புறப்பட்டுத் திருமருகலுக்குப்போய்ச் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு சிலநாள் அங்கிருந்தார். அந் நாளிலே ஒருவணிகன் வழிச்செல்வோனாகி ஒரு கன்னியை யும் உடன்கொண்டு கோயிலுக்குப்புறத்திலே ஒரு திரு மடத்தில் இராத்திரியில் நித்திரைசெய்யும்போது பாம்பினாலே தீண்டப்பட்டு மாண்டான். அதுகண்டு, அக்கன்னியானவள் தளர்ந்து அவனைப் பாம்பு தீண்டியும் தான் தீண்டாமல், சமீபத்திலே வீழ்ந்து புரண்டு அழுதாள். அப்பொழுது விஷ வைத்தியர் வந்து தீர்க்கவுந் தீராதாயிற்று, விடியற்காலத்திலே அக்கன்னிகை மிக அயர்ந்து புலம்பித் திருக்கோயிலின் வாயிற்றிக்கை நோக்கிக் கைதொழுது, ''தேவரீர் இந்தக் கொடிய விஷம் நீங்கும்பொருட்டும் அடியேன் துக்கசாகரத் தினின்று கரையேறும் பொருட்டும் அருள்செய்யும்'' என்று பிரார்த்தித்தாள். அவ்வோசையைச் சுவாமிதரிசனஞ் செய்யும்படி எழுந்தருளிவருகின்ற திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் கேட்டுத் திருவுளம் இரங்கி, அவளுக்கு அருள்செய்யும் பொருட்டு அடியார்களோடு எழுந்தருளிவந்து நின்று, அவளை நோக்கிப் ''பயப்படாதே, நிகழ்ந்தசமாச் சாரத் தைச்சொல்'' என்று அருளிச்செய்தார். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமறைக்காடு பண்: இந்தளம்
## பதிக எண்: 173

திருச்சிற்றம்பலம்

சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய் கவெனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே 1

சங்கந் தரளம் மவைதான் கரைக்கெற்றும்
வங்கக் கடல்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
மங்கை யுமைபா கமுமா கவிதென்கொல்
கங்கை சடைமே லடைவித் தகருத்தே 2

குரவங் குருக்கத் திகள்புன் னைகஞ்ஞாழல்
மருவும் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
சிரமும் மலருந் திகழ்செஞ் சடைதன்மேல்
அரவம் மதியோ டடைவித் தலழகே. 3

படர்செம் பவளத் தொடுபன் மலர்முத்தம்
மடலம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
உடலம் முமைபங் கமதா கியுமென்கொல்
கடனஞ் சமுதா வதுவுண் டகருத்தே. 4

வானோர் மறைமா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனோர் தொழுதேத் தவிருந் தநீயென்கொல்
கானார் கடுவே டுவனா னகருத்தே 5

பலகா லங்கள்வே தங்கள்பா தங்கள்போற்றி
மலரால் வழிபா டுசெய்மா மறைக்காடா
உலகே முடையாய் கடைதோ றுமுன்னெனென்கொல்
தலைசேர் பலிகொண் டதிலுண் டதுதானே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலா வலயத் தயலே மிளிர்வெய்தும்
சேலார் திருமா மறைக்காட் டுறைசெல்வா
மாலோ டயனிந் திரனஞ் சமுனென்கொல்
காலார் சிலைக்கா மலைக்காய்ந் தகருத்தே. 7

கலங்கொள் கடலோ தமுலா வுங்கரைமேல்
வலங்கொள் பவர்வாழ்த் திசைக்கும் மறைக்காடா
இலங்கை யுடையா னடர்ப்பட் டிடரெய்த
அலங்கல் விரலூன் றியருள் செய்தவாறே 8

கோனென் றுபல்கோ டியுருத் திரர்போற்றும்
தேனம் பொழில்சூழ் மறைக்காட் டுறைசெல்வா
ஏனங் கழுகா னவருன் னைமுனென்கொல்
வானந் தலமண் டியுங்கண் டிலாவாறே. 9

வேதம் பலவோ மம்வியந் தடிபோற்ற
ஓதம் முலவும் மறைகாட் டிலுறைவாய்
ஏதில் சமண்சாக் கியர்வாக் கிவையென்கொல்
ஆத ரொடுதா மலர்தூற் றியவாறே 10

காழிந் நகரான் கலைஞா னசம்பந்தன்
வாழிம் மறைக்கா டனைவாய்ந் தறிவித்த
ஏழின் னிசைமா லையீரைந் திவைவல்லார்
வாழி யுலகோர் தொழவா னடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*வேதாரணியத்தில் வேதங்கள் சிவபெருமானை அருச்சித்த பின் ஆலயக்கதவுகளைச் சாத்திச் சென்றன. அவற்றைத் திறக்கப்பாடும்படி திருஞானசம்பந்தர்கூற "அப்பர் பண்ணினேர் மொழி" பாடித் திறக்கச் செய்தார். வழிபாடு முடிந்தபின் அக்கதவுகள் முன்புபோல் அடைக்கப் பாடும்படி அப்பர் வேண்டத் திருஞானசம்பந்தர் பாடியருளி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது இப்பதிகமாகும். இப்பதிகத்தின் முதற்பாடல் பாடிய அளவிலேயே கதவு அடைக்கும்படி சிவபெருமான் அருள் புரிந்தமையால் ஏனைய திருப்பாடல்களில் சம்பந்தர் சிவபெருமானை முன்னிலைப்படுத்திக் கதைப்பது போன்ற பொருளில் பாடியுள்ளார்.

விருப்பு வெறுப்பு வேண்டுதல் வேண்டாமை என்பன அற்ற பெரியோர் இறைவனுடன் எப்படிக்கதைப்பர் என்பதற்கு இப்பாடல்கள் நல்ல உதாரணங்களாம். இப்பதிக பாராயணம் சிவபெருமானுடன் உரையாடுவது போன்ற தன்மையை நமக்கு நல்கும் என்பது உறுதி.

**கயப்பாக்கம் சதாசிவச்செட்டியார் பதிப்பிலுள்ள விளக்கம்:**

திருமறைக் காட்டினைச் சென்றெய்திய ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசும் இறைவனை வணங்கு மாறு திருக்கோயிலையடைந்தபோது முன்பு வேதம் பூசித்து அடைத்த திருக்கதவு திறக்கப்பெறாமையினால் வேறோர் வாயிலை வகுத்து அதனால் உட்செல்லப் பெறுதலைய றிந்தனர். அறிந்தபோது பிள்ளையார் ஆளுடைய அரசினை அது திறக்கப் பெறுமாறு பாடும்படி வேண்ட அவரும் திருப்பதிகம் பாடித் திறந்தருள இரண்டு நாயன்மார்களும் அவ்வபிமுகத்துத் திருவாயிலானேயுட்சென்று பெருமானைப் பாடி வணங்கிப் புறம் போந்தனர். அப்போது வாக்கின் தனிமன்னர் அத்திருவாயில் திறக்கவும் அடைக்கவுமான வழக்கம் எப்போதும் நிகழும்படிப் பிள்ளையாரை யதனை யடைக்கப் பாடுமாறு வேண்டுதலும் அவரும் 'சதுரம் மறைதான்' என்னுமிப் பதிகமெடுத்துப் பாடி முதற்பாட்டானே யடைத்துப் பதிகத்தை நிரப்பித் திருக் கடைக்காப்புச் சாத்தியபின் இருபெரு)மக்களும் தத்தம் மடாலயங்கட் கெழுந்தருளினார்கள். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமயிலாப்பூர் பண்: சீகாமரம்
## பதிக எண்:183

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய் 1

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய். 2

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். 3

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய் 4

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய் 6

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய். 7

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய் 8

நற்றா மரைமலர்மே னான்முகனு நாரணனும்
உற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய் 9

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய் 10

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே 11

திருச்சிற்றம்பலம்

இத்தலம் தொண்டை நாட்டிலுள்ளது.
இறைவன் : கபாலீச்சுவரர். இறைவி : கற்பகவல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய் 6

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய். 7

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய் 8

நற்றா மரைமலர்மே னான்முகனு நாரணனும்
உற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய் 9

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய் 10

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே 11

திருச்சிற்றம்பலம்

இத்தலம் தொண்டை நாட்டிலுள்ளது.
இறைவன் : கபாலீச்சுவரர். இறைவி : கற்பகவல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

மயிலாப்பூர் கபாலீச்சரம் என்னும் ஆலயத்தில் எலும்பைப் பெண்ணாக்கிய பதிகம் இது. திருஞானசம்பந்தர் மகிமை தேவாரப் பெருமை சிவாலய வழிபாட்டின் தன்மை என்பவற்றை நன்கு உணர்த்தும் பதிகம் இது.

சிவநேசர் தம்மகள் பூம்பாவை பாம்பு கடித்து இறந்ததும் விடம்நீக்கி உயிர்ப்பிக்க இயலாத நிலையில் அவள் உடலைச்சாம்பராக்கி ஒருமட்குடத்திற் சேமித்து வைத்திருந்தார். சிவநேசரின் சிவபக்தி திருஞானசம்பந்த பக்தி என்பவற்றை அறிந்த சம்பந்தசுவாமிகள் இறந்த பெண்ணின் பெயரால் இப்பதிகத்தைப் பாட எலும்பும் சாம்பரும் பெண்ணானதாகிய வரலாறு இது.

இத்தேவாரப் பதிகத்தின் சாரமான கருத்தைச் சேக்கிழார் மனிதராகப் பிறந்தவர் அடையத்தக்க பயனாவது சிவனடியார்க்கு உணவளிப்பதும் சிவபெருமானுக்குத் திருவிழாச் செய்து தரிசித்தலுமே என்று குறிப்பிட்டிருக்கிறார். திருஞானசம்பந்தர் இப்பூவுலகில் மனித உடலோடு வாழ்ந்து பலநூறு வருடங்களின் பின்னரும் அவர் பாடியபடி இரு புண்ணியங்களையும் செய்து மனிதப்பிறவியினால் அடையத்தக்க பயனை அடையத்தூண்டும் பதிகம் இது.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருமயிலாப்பூரில் வைசியர் குலத்திற் சிவபக்தியிற் சிறந்த சிவநேசர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசம்பந்தருடைய திருவருட்டிறங்களைக் கேட்டுத் தம்முடைய சுற்றத்தார் கேட்குமாறு ''என்மகள பூம்பாவை யைத் திருஞானசம்பந்தருக்குக் கொடுப்பேன்'' என்று கூறினார். ஒருநாள் பூம்பாவை பூஞ்சோலைக்குச் சென்று பூக்கொய்யுங்கால், ஒரு பாம்பு தீண்ட அவள் இறந்தாள். சிவநேசர் ''இவளைப் பிள்ளையாருக்கென்று சொன்னதனால் இவ்வுடலைத் தகனஞ்செய்து, எலும்பையும் சாம்பரையும் ஒரு குடத்தில் இட்டுக் கன்னி மாடத்தில் அமைத்து வைத்தார்.

ஞானசம்பந்தர் காளத்தி முதலிய பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திருவொற்றியூரடைந்தார். அச்சமயம் சிவநேசர், சுவாமிகளின் வரவையறிந்து, ஆங்குச் சென்று தரிசித்தார். சிவநேசருடைய செய்கையை அடியார் சொல்லக்கேட்டுச் சம்பந்தர் திருமயிலாப்பூருக்கு எழுந்தருளி னார். கபாலீசுவரர் திருமுன் நின்று, சிவநேசர் சேமித்து வைத்திருந்த எலும்புக் குடத்தைக் கொண்டு வரச்செய்தார், திருவருளின் பெருமையைச் சிந்தித்துத் திருவருணோக் கினாலே ''பூம்பாவாய்'' என்று விளித்து ''மட்டிட்டபுனனை'' என்ற திருப்பதிகத்தை ஓதியருளினார். பூம்பாவை முதற் றிருப்பாட்டிலே வடிவுபெற்று, மற்ற எட்டுப்பாட்டிலே பன்னி ரண்டு ஆண்டு நிரம்பப் பெற்றாள. பத்தாம் திருப்பாட்டு அருளிச செய்ததும், பூம்பாவை தன்கை வெளியே தோன்றக்குடம் உடைந்து எழுந்தனள. எல்லோரும் அற்புதம் அடைந்தனர். சிவனடியார்கள் ஹர ஹர என்று ஆரவாரித்தார்கள். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாலவாய் பண்: காந்தாரம்
## பதிக எண்:202

திருநீற்றுப்பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் றிருநீறே 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் றிருநீறே 4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே 5

அருத்தம தாவது நீறு வவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே. 7

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே 8

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயன் றிருநீறே 10

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*திருஞானசம்பந்தசுவாமிகள் பாண்டியமன்னனின் வெப்புநோய் நீங்கத் தன் திருக்கையால் திருநீறு பூசுமுன் திருநீற்றைத் துதித்துப் பாடியது இப்பதிகம். திருநீற்றின் பெருமை கூறும் இப்பதிகத்தை அகத்தியர் தேவாரத்திரட்டு பரையின் வரலாறு = சிவசக்தியின்தன்மை என்று கூறுகின்றது. திருநீற்றினூடாகச் சிவசக்தி = சிவானுக்கிரகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிபபடுகின்றது என உணரவேண்டும். ''திருநீற்றைப் போற்றித்துதித்து அதை அணிந்து. பாண்டியனின் வெப்பு நோய்க்கு மருந்தாகப் பூசிய தாகத் தேவாரப்பாடல் அமைந் துள்ளது. மிகத் தெளிவாக அழகாகத் திருநீற்றுமகிமை யைப்பாடும் இப்பதிகத்தை ஓதித் திருநீறு அணிபவர் இன்றும் நோய் நீக்கம் பெற்று வருகின்றனர். இப்பதிகத்தின் மூலம் நோய் நீக்கம்பெறுவது மட்டுமன்றித் நிருநீற்றின் பெரு மையை அறிந்து சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் பிரகாசமாக அணிந்து நன்மையடைய வேண்டியது சைவசமயத்தவர் கடனாகும்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

மதுரைத்திருப்பதியில் பாண்டியன் திருஞானசம்பந்தப் பிள்ளையாரையும் சமணர்களையும் நோக்கி. ''என்னுடைய வெப்பு நோயைத் தீர்த்தவர் எவரோ அவரே வாதில் வென்றவர்'' என்று சொல்ல சமணர்கள் ''நாங்கள் இடப் பாகத்து நோயைத் தீர்ப்போம். அவர் வலப்பாகத்து நோயைத் தீர்க்ககடவர்'' என்று சொல்லி, அரசனுடைய இடப்பாகத்தைப் பீலியினாலே தடவினார்கள். அதனால் வெப்புநோய்வளரப், பாண்டியன் அதைப் பொறுக்கலாற்றாத வனாகிப், பிள்ளையாரை நோக்கப், பிள்ளையார் ''மந்திரமாவதுநீறு'' என்னுந் திருநீற்றுத் திருப்பதிகத்தைப் பாடி, அவனுடைய வலப்பாகத்தை விபூதிகொண்டு திருக் கரத்தினாலே தடவியருள அவ்வலப்பாகத்து வெப்புநோய் நீங்கிற்று. இடப்பாகத்து வெப்புநோய் முன்னையிலும் மிகுந்து பொங்கப் பாண்டியன் சமணர்களை விட்டுப் பிள்ளையாரை நோக்கி. இடப்பாகத்து வெப்பையும் தேவரீரே நீக்கியருளும் என்று மனசினால் வணங்கிப் பிரார்த்தித்தான். பிள்ளையார் இடப்பாகத்தையும் விபூதிகொண்டு தடவியருளப் பாண்டியன் வெப்பு நோய் முழுதும் நீங்கி உய்நதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது பண்: பியந்தைக்காந்தாரம்
## கோளறு திருப்பதிகம்
## பதிக எண்:221

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிப்பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல ணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செய்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
வெருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறு
முடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கண் முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளானபலவும்
அதிகுண நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டனெந்தை மடவாட னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே 5

வாள்வரி யதள தாடை வரிகோவ ணத்தர்
மடவா டனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே 6

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேல ணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவா டனோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தெ
னுளமேபுகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கட னல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல ணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடன் மேருநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே 9

கொத்தலர் குழலியோடு விசையற் குநல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ண
றிருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில் கொளாலை விளைசெந் நெறுன்னி
வளர்செம் பொனெங்கு நிகழ
நான்முகனா தியாய பிரமா புரத்து
மறை ஞானஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார் கள்வானி
லரசாள் வராணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் திருஞான சம்பந்தசுவாமிகளுக்குப் பாண்டிநாட்டின் அவலத்தை அறிவிக்கச் செய்தனர். அதை அறிந்த சம்பந்தசுவாமிகளும் பாண்டிநாட்டுக்குப்புறப்பட்டார். அதை அறிந்த திருநாவுக்கரசு சுவாமிகள் கிரகநிலை திருப்திகரமாயில்லை; சமணர்களும் கொடியவர் என்று கூறித் தடுத்தார். அப்படித்தடுக்கவேண் டாம். கிரகங்களும் சமணர் கொடுமைகளும் சிவனடியாரைப் பாதிக்கமாட்டா என்ற கருத்தை இப்பதிகத்தின் மூலம் சம்பந்த சுவாமிகள் அருளிசெய்து அப்பர் தடுக்காமல் உடன்படுமாறு செய்து பாண்டிநாட்டுக்குப் புறப்பட்டார் என்பது வரலாறு. வேதாரணியத்தில் கதவு சாத்தப்பதிகம் பாடிய விடயத்திலும் திருவாமூரில் சிவதரிசனம் பெற்ற விடயத்திலும் திரு ஞானசம்பந்தரின் பெருமையை உடனிருந்து கண்ட அப்பர் சுவாமிகள் சம்பந்தரைத் தடுக்க நியாயமில்லை; ஏன் தடுத்தார் என ஒரு கேள்வியை உண்டாக்கிச் சம்பந்த சுவாமிகளிடம் இருந்த பேரன்புகாரணமாக முன்னைய நிகழ்ச் சிகளை மறந்து தடுத்தார் என ஒரு சமாதானம் கூறுகின்ற னர். இச்சமாதானத்திலும் பார்க்கச் சைவ மக்களுக்கு இத் திருப்பதிகம் கிடைக்கச் செய்வதற்காக அப்பர் சுவாமிகளைத் தடுக்கத் தூண்டினார் என்று கருதுவது பொருத்தமாக உள் ளது. ஏனெனில் இப்பதிகபாராயணத்தால் நன்மையடைவோர் எண்ணில்லாதவர் இன்றும் உளர். பல வருடங்களுக்கு முன் எட்டுக்கிரகங்கள் ஒன்று கூடியபோது விஞ்ஞானிகளே என்ன நிகழுமோ என அஞ்சினர். அக்காலத்தில் சைவத்தமிழ் உலகில் வாழ்ந்த நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீத மானோர் தனித்துங் கூடியும் இப்பதிகபாராயணம் செய்தமையும் பின் எதுவித அசம்பாவிதமும் உண்டாகாமையும் வெளிப்படை.

இப்பதிக முதலாம் பாடலில் சிவபெருமானை உள்ளத் தில் தியானிப்பவர்க்குக் கிரகங்கள் நன்மையே செய்யும் என்ற சம்பந்தர் பத்தாம் பாடலில் ''புத்தரோடு அமணைவா தில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு'' என்றருளி அப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளின் அச்சத்தைப் போக்கியமையும் அப்படித் திரு நீறிட்டுப் பாண்டியன் வெப்புநோயை நீக்கி வெற்றி பெற்றமை யும் பின்னர் நிகழ்ந்த தேவையற்ற வாதங்கள் சமணரின் நப்பாசையின் விளைவாகியமையும் அவதானிக்கத்தக்கன.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப் பிள்ளையார் வேதாரணியத்தில் எழுந்தருளியிருக்கும்போது, பாண்டிநாட்டிலே, பாண்டியராஜன் சமணர்களுடைய துர்ப்போதனையினாலே சத்திய மார்க்க மாகிய சைவத்தைவிட்டு, அசத்தியமார்க்கமாகிய ஆருகத மதத்திலே பிரவேசித்தான். அரசன் அவ்வாறா யினமையால், குடிகளும் அவ்வாறாயின. அதனால் பாண்டி நாடெங்கும் வைதிகமார்க்கமுஞ் சைவமார்க்கமுமாகிய இரண்டுங்குன்றிச சமணசமயமே விருத்தியாக, அப்பாண் டியனுடைய மனைவி யாராகிய மங்கையர்க்கரசியாரும், முதன்மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரும், மிகக் கவலைகொண்டு பரிசனங்கள் வாயிலாகத் தமக்குச் சொல்லியனுப்பிய வார்த்தையைக் கேள்வியுற்ற பிள்ளையார், அப்பமூர்த்தியோடு திருக்கோயி லிற்சென்று, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு திருக் கோபுரத்துள் இருந்து, அதனை அவருக்குச் சொல்லிப் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளுதற்குத் துணிந்தருளினார். அப்பொழுது, அப்பமூர்த்தி ''தேவரீர் சிறுபிள்ளையாய் இருக் கிறீர், அச்சமணர்களுடைய வஞ்சனைக்கோ ரெல்லை யில்லை, தேவரீருக்கு இப்போது கிரகங்கள் வலியில, ஆதலால் தேவரீர் அவ்விடத் திற்கு எழுந்தருளுதற்கு உடன் படுவது ஒண்ணாது என்று விண்ணப்பம் செய்யப் பிள்ளையார் சிவபிரான், நம்முடைய சிந்தையே கோயில்கொண்டு எழுந் தருளியிருத்தலினால் நமக்குத் தீங்கு வாராது'' என்று சொல்லிச் சிவபிரானுடைய திருவடிகளைத் துதித்து ''வேயுறு தோளிபங்கள்'' என்னுங் கோளறு திருப்பதிகத்தைப் பாடியரு ளினார். அத்திருப் பதிகத்தைக் கேட்டபின், அப்பமூர்த்தியும் உடன்பட்டருளினார். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வாயிலரத்துறை பண்: பியந்தைக்காந்தாரம்
## பதிகளண்: 226

திருச்சிற்றம்பலம்

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே 1

ஈர வார்சடை தன்மே லிளம்பிறை யணிந்தவெம் பெருமான்
சீருஞ் செல்வமு மேத்தாச் சிதடர்க டொழச்செல்வ தன்றால்
வாரி மாமல ருந்தி வருபுன னிவாமல்கு கரைமேல்
ஆருஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 2

பிணிக லந்தபுன் சடைமேற் பிறையணி சிவனெனப் பேணிப்
பணிக லந்துசெய் யாத பாவிக டொழச்செல்வ தன்றால்
மணிக லந்துபொன் னுந்தி வருபுன னிவாமல்கு கரைமேல்
அணிக லந்தநெல் வாயி லரத்துறை யடிகடம் மருளே. 3

துன்ன வாடையொன் றுடுத்துத் தூயவெண் ணீற்றின ராகி
உன்னி நைபவர்க் கல்லா லொன்றுங்கை கூடுவ தன்றால்
பொன்னு மாமணி யுந்திப் பொருபுன னிவாமல்கு கரைமேல்
அன்ன மாருநெல் வாயி லரத்துறை யடிகடம் மருளே. 4

வெருகு ரிஞ்சுவெங் காட்டி லாடிய விமலனென் றுள்கி
உருகி நைபவர்க் கல்லா லொன்றுங்கை கூடுவ தன்றால்
முருகு ரிஞ்சுபூஞ் சோலை மொய்ம்மலர் சுமந்திழி நிவாவந்
தருகு ரிஞ்சுநெல் வாயி லரத்துறை யடிகடம் மருளே. 5

உரவு நீர்ச்சடைக் கரந்த வொருவனென் றுள்குளிர்ந் தேத்திப்
பரவி நைபவர்க் கல்லாற் பரிந்துகை கூடுவ தன்றால்
குரவ நீடுயர் சோலைக்குளிர்புன னிவாமல்கு கரைமேல்
அரவ மாரு நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீல மாமணி மிடற்று நீறணி சிவனெனப் பேணும்
சீல மாந்தர்கட் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கோல மாமல ருந்திக் குளிர்புன னிவாமல்கு கரைமேல்
ஆலுஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 7

செழுந்தண் மால்வரை யெடுத்த செருவலி யிராவண னலற
அழுந்த வூன்றிய விரலான் போற்றியென் பார்க்கல்ல தருளான்
கொழுங்க னிசுமந் துந்திக் குளிர்புன னிவாமல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 8

நுணங்கு நூலயன் மாலு மிருவரு நோக்கரி யானை
வணங்கி நைபவர்க் கல்லால் வந்துகை கூடுவ தன்றால்
மணங்க மழ்ந்துபொன் னுந்தி வருபுன னிவாமல்கு கரைமேல்
அணங்குஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 9

சாக்கி யப்படு வாருஞ் சமண்படு வார்களு மற்றும்
பாக்கி யப்பட கில்லாப் பாவிக டொழச்செல்வ தன்றால்
பூக்க மழ்ந்துபொன் னுந்திப் பொருபுன னிவாமல்கு கரைமேல்
ஆர்க்குஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே. 10

கறையி னார்பொழில் சூழ்ந்த காழியுண் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த வரத்துறை யடிகடம் மருளை
முறைமை யாற்சொன்ன பாடன் மொழியு மாந்தர்தம் வினைபோய்ப்
பறையு மையுற வில்லைப் பாட்டிவை பத்தும்வல் லார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

இது நடுநாட்டிலுள்ள தலம்.
இறைவன் : அரத்துறைநாதன். இறைவி: ஆனந்தநாயகி

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*திருநெல்வாயிலரத்துறை எனும் தலத்து இறைவனைக் குறித்துப் பாடியருளியது இப்பதிகம். திருஞானசம்பந்தர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு குழந்தையாயிருந்த போதும் தொடர்ந்து தந்தையின் தோளிற் செல்லாது நடந்துசென்றார். அதுகண்ட சிவ பெருமான் சம்பந்தர் பொருட்டு இத்தலத்தில் முத்துச் சிவிகை குடை முத்துச்சின்னங்கள் என்பன வழங்கினார். அந்த ஆலயத்திலிருந்த அன்பர்கட்கும் சம்பந்த சுவாமிகளுக்காய தன் அருளிப்பாட்டைக் கனவின் மூலம் உணர்த்தினார். சிவபெருமான் அருளியவற்றை ஏற்றுக்கொள்ளும்போது இப்பதிகத்தை அருளினார் சம்பந்தர்.

சிவபெருமானை எந்தை என்றும் ஈசன் என்றும் இளம்பிறை அணிந்தவர் என்றும் காட்டிலாடி என்றும் கூறி வணங்கி மகிழ்பவர், சிவவணக்கத்தில தம் இனிய நேரத்தைப் போக்குபர், சிவனருளைப் பெறுவர் என்பது இப்பதிகத்தின் பொழிப்பாகும். உன்னிநைபவர்கல்லால் ஒன்றும் கைகூடுவ தன்று என்பதும் இப்பதிகத்துள்ள ஒரு தொடர். மனம் பொருந்தச் சிந்தனை செய்யாமலும் சிவனருட்சிறப்புக்களை நினைதலால் உள்ளமுருகாதவரும் சிறந்த இனிய கருமங்கள் நிறைவேறப்பெறார் என்பது கருத்து. மனம் பொருந்தாத மனம் ஈடுபடாத நிலையில் எம்மால் செய்யப் படும் பூசை திருவிழா தோத்திரம் என்பவற்றின் தன்மை பற்றியும் பயன்பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

திருஞானசம்பந்தர் சிவனை உன்னி நையும் தன்மையராய் இருந்தமையால் அவர் நடந்து வருந்தியதை உடன் தீர்க்க வேண்டும் என சிவபெருமானைத் தூண்டியதாக நாம் அவதானிக்க வேண்டும்.

திருஞானசம்பந்தரின் நடக்கும் துன்பத்தைப் போக்கச் சிவிகையும் முத்துக் குடையும் கொடுத்தது சரி. ஊதுசின் னங்கள் கொடுத்தமை என்பதற்கு ஏழாலை மு.க அவர்கள் கூறிய விளக்கம் அனைவரும் அறிய வேண்டியதாகும். திருஞானசம்பந்தரை எல்லோரும் தரிசிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசிப்பதால் தரிசிப்பவர்க்கு நன்மையுண்டு என்ற கருணை யாலே ஊதுகொம்பு முதலியவற்றைச் சிவபெருமான் வழங் கினார். அவற்றது சத்தங்கேட்டுத் தூரத்தில் உள்ளவரும் அவரைச் சமீபத்துத் தரிசிக்க முடியும். அப்படித்தரிசிக்கப் பொருத்தமாகவே சிவிகையும் குடையும். சிவபெருமான் சம்பந்தருக்கு யானையையோ குதிரையையோ வழங்கியிருந்தால் அவரைத் தொடர்ந்து செல்பவர் வழியில் தரிசிக்கும் வாய்ப்பை இழப்பர். இப்படியான செய்தியிலிருந்து திருவிழாக்களில் சுவாமி தரிசனத்தின் மகிமையையும் யூகிப்போமாக.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருநெல்வாயிலரத் துறைக்குப் போகும்போது தந்தையாருடைய தோண் மேலிருத்தலை ஒழிந்து, திருவடித்தாமரைநோவப் பையப் பைய நடந்து, மாறன்பாடி என்னும் பதியிற்சென்று அன்றிரவு அப்பதியிலேயே தங்கினார். திருவரத்துறையில் எழுந்தருளியி ருக்கின்ற கடவுள் தம்முடைய திருக்குமாரராகிய பிள்ளை யாருடைய வழிவருத்தத்தைத் திருவுளத்தடைத்து, அந்த ஸ்தலத்திலிருக்கின்ற பிராமணர்கள் அனைவருக்கும் தனித்தனியே சொப்பனத்திலே தோன்றிப் பிள்ளையாருக்கு முத்துச்சிவிகையும், முத்துககுடையும், மூத்துச்சின்னங்களும் தம்மிடத்தில் எடுத்துக்கொண்டுபோய்க் கொடுக்கும்படி ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். உடனே பிராமணர்கள் விழித்தெழுந்து, மகிழ்ந்து அற்புதமெய்திய சிந்தையோடும் ஆலயத்தில் வந்து கூடித் திருப்பள்ளியெழுச்சிக்காலம் வரத், திருக்காப்பை நீக்கி, முத்துச்சிவிகையையும், முத்துக் குடையையும், முத்துச்சின்னங்களையும் கண்டு, ஆனந்தங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, துந்துபி முதலிய வாத்தியங்கள் ஒலிப்பச் சிவனடியார்களோடு, அந்தச் சிவிகை முதலியவற்றைத் தாங்கிக் கொண்டு, ஆளுடையபிள்ளையாரிடத்திற்குப் போனார்கள். அதற்குமுன் சிவபிரான் ஆளுடையபிள்ளையாருக்கும் சொப்பனத்திலே தோன்றி, ''நாம் உனக்கு முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னங்களும் அனுப்புகின்றோம். நீ அவைகளை ஏற்றுக்கொள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். பிள்ளையார் விழித்தெழுந்து, தாங்கண்ட சொப்பனத்தைத் தந்தையாருக்கும், அடியார்களுக்கும் அருளிச்செய்து வைகறையிலே விபூதி தரித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு எழுந்தருளினார். சூரியோதய காலத்திலே பிராமணர்கள் சிவனடியார்களோடு ஹர ஹர என்னும் ஓசையுடனே முத்துச் சிவிகை முதலியவற்றைக் கொண்டு எதிரே வந்து, பிள்ளையாரை வணங்கி நின்று, ''இவை திருவரத்துறையில் எழுந்தருளியிருக்கிற கடவுள் தந்த பொருள்கள், ஏற்றருளும்'' என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு, அக் கடவுளுடைய திருவருளை ''எந்தையீசனெம்பெருமான்'' என்னுந் திருப்பதிகத்தினாலே பாடித் திருவருள்வடிவாகிய முத்துச்சிவிகையை வலஞ் செய்து, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு, உலகமெல்லாம் உய்யும்படி அதில் ஏறியருளினார். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாந்திருமுறை

## திருவாவடுதுறை பண்: காந்தாரபஞ்சமம்
## பதிக எண்:262

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழ றொழுதெழுவேன்
கடறனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 1

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புன றயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 2

நனவினுங் கனவினு நம்பாவுன்னை
மனவினும் வழிபடன் மறவேனம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மல ரடியலா லரற்றாதென்னாக்
கைமல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதி ளெரியெழ முனிந்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழ லடியலாற் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் னடியலா லேத்தாதென்னா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலா லரற்றாதென்னா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழலலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 8

உண்ணினும் பசிப்பினு முறங்கினுநின்
ஒண்மல ரடியலா லுரையாதென்னாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலு மளப்பரி தாயவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலா லரற்றாதென்னாப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே 10

அலைபுன லாவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர்நிலமிசை நிலையிலரே. 11

திருச்சிற்றம்பலம்

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.

இறைவன் : மாசிலாமணியீசர். இறைவி : ஒப்பிலாமுலையம்மை.
(செம்பொற்றியாகர்)

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*திருஞானசம்பந்தசுவாமிகள் தம் தந்தையாருக்குப் பொருள் தேவைப்பட்டபோது திருவாவடுதுறையில் இப் பதிகத்தைப் பாடிப் பரவிச் சிவபெருமானிடம் பொன்முடிப்புப் பெற்றுக் கொடுத்தார். ஆயிரம் பொற்காசுகள் கொண்ட தாகவும் எடுக்க எடுக்கக் குறையாத தன்மை உடையதா கவும் அப்பொன்முடிப்பு இருந்தது. அவ்வாறு பொன் பெறச்சம்பந்தர் பாடிய இப்பதிகத்தைத் தினமும் பாராயணம் செய்து தம் பணத் தேவையை நிறைவேற்றி வருபவர் பலர் இன்றும் வாழ்கின்றனர்.*

*நாலடி மேல்வைப்பு என்ற பாடல்வகையைச் சேர்ந்தது இப்பதிகம். ''ஈய(கொடுக்க) நிதி இல்லன் உன் அடியலது ஒன்று அறியேன் என்ற மனநிலையில் இப்பதிகத்தைச் சம்பந்தசுவாமிகள் அருளியதாகக் கூறுவர். இப்பதிக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராயணத்தின் மூலம் பணத் தேவைகளை நிறைவேற்றுவது மட்டுமன்றி இறைவன் திருவடிப்பெருமையை மனங் கொள்வதும். இடரினும் தளரினும், வாழினும் சாவினும். நனவினும் கனவினும் சிவசிந்தை சிவவழிபாடு என சுடுபடும் ஆசையைக் கொள்ளவேண்டும்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருப்பட்டீச்சரத்தி னின்றும் நீங்கித் திருவாவடுதுறையை அடைந்து. சுவாமி தரிசனஞ் செய்து கொண்டிருக்கு நாளிலே. சிவபாதவிருதயர் பிள்ளையாரை நோக்கி, ''நான் யாகஞ் செய்தற்கு உரியகாலஞ் சமீபித்தது. அது செய்யும்படி போதற்குப் பொருள் தரல்வேண்டும்'' என்றார். பிள்ளையார் அதைக்கேட்டுத் திருக்கோயிலிற் சென்று வணங்கி, ''இடரினுந் தளரினும்'' என்னுந் திருப்பதிகம் பாடினார். அப்பொழுது சிவபெருமானுடைய திருவருளினாலே, ஒரு சிவபூதம் விரைந்துவந்து, பீடத்தின்மேலே ஆயிரம்பொன் பொருந்திய கிழியொன்றை வைத்து, முன்னே நின்று. இந்தக்கிழி பொன்னுலவாக் கிழி. இது சிவபெருமானால் உமக்கு அருளிச்செய்யப்பட்டது.'' என்றுசொல்லப், பிள்ளையார் திருவருளை நினைந்து. நமஸ்கரித்து எழுந்து அஞ்சலி செய்து, பீடத்தின்மேலே வைக்கப்பட்ட பொற்கிழியைச் சிரமேற்கொண்டு, தந்தையார் கையிற் கொடுத்துச் ''சிவபெருமானையே தலைவராக நினைத்து வேத விதிப்படி செய்யப்படும் யாகத்தை நீரும் . சீர்காழி யில் இருக்கின்ற மற்றப் பிராமணர்கள். சமஸ்தரும் செய்ய. இக்கிழி குறையாது மிகும்'' என்று சொல்லிச் சீர்காழிக்குப் போம்படி அவருக்கு விடைகொடுத்து அனுப்பித் தாந் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்தார்.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கொள்ளம்பூதூர் பண்: காந்தாரபஞ்சமம்
## ஈரடிமேல்வைப்பு
## பதிகஎண்: 264

திருச்சிற்றம்பலம்

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே 1

கோட்ட கக்கழனிக் கொள்ளம் பூதூர்
நாட்ட கத்துறை நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே 2

குலையினார் தெங்குசூழ் கொள்ளம் பூதூர்
விலையி லாட்கொண்ட விகிர்தனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே 3

குவளை கண்மலருங் கொள்ளம் பூதூர்த்
தவள நீறணி தலைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே 4

கொன்றைபொன் சொரியுங் கொள்ளம் பூதூர்
நின்ற புன்சடை நிமலனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடம்வந் தணையுங் கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய வடிகளை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 6

ஆறுவந் தணையுங் கொள்ளம் பூதூர்
ஏறு தாங்கிய விறைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே 7

குரக்கினம் பயிலுங் கொள்ளம் பூதூர்
அரக்கினைச் செற்ற வாதியை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 8

பருவரா லுகளுங் கொள்ளம் பூதூர்
இருவர் காண்பரி யான்கழ லுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே. 9

நீரகக் கழனிக் கொள்ளம் பூதூர்த்
தேரமண் செற்ற செவ்வனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே 10

கொன்றைசேர் சடையான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுண் ஞானசம் பந்தன்
இன்றுசொன் மாலைகொண் டேத்தவல் லார்போய்
என்றும் வானவ ரோடிருப் பாரே 11

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ள தலமிது.

இறைவன் : வில்வவனநாதர். இறைவி : சவுந்தரநாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

திருஞானசம்பந்தர் கொள்ளம்பூதூர் என்ற சிவத்தலத்துக்குச் செல்ல இடையூறாக ஆற்றுப்பெருக்கு வேகமாக இருந்தது. உடனே சுவாமிதரிசனம் செய்ய எண்ணிய சம்பந்தசுவாமிகள் அடியார்களுடன் ஓடத்தில் ஏறிநின்று ஓடம் ஆற்றைக்கடந்து செல்ல வேண்டுமெனச் சிவபெருமானிடம் முறையிட்டுப் பாடியருளியது இப்பதிகம். ஈரடிமேல் வைப்பு என்றசெய்யுளினத்தைச் சேர்ந்த பாடல்கள். ''செல்ல உந்துக சிந்தையார் தொழ நல்குமாறருள் நம்பனே'' என்னும் இரண்டடிகளும் ஒவ்வொரு பதிகத்திலும் மேல் வைப்பாக உள்ளன. இந்த இரு அடிகளும் ஏனைய பகுதிகளும் உள்ளத்தைக் கவரும் எளிமையும் பொருள் நுட்பமும் பொருந்தியவை. திரும்பத்திரும்பப் பாட இன்பம் தருபவை.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருக்கூட்டத்தோடு முள்ளிவாய்க்கரையை அணைந்தபோது, அங்கே ஆறுமிகப பெருகுதலால், நீர்வாணர்கள் ஓடத்தை ஓடக்கோல் நிலையில்லாமைபற்றிக் கரையிலே நிறுத்திப் போய்விட்டார்கள். பிள்ளையார் அதுகண்டு கரையிலே எழுந்தருளி நின்ற போது, கொள்ளம்பூதூர் எதிரே தோன்ற அங்கே சென்று சுவாமிதரிசனஞ் செய்தற்குத்திருவுளம் விரும்புதலால் அதிசீக்கிரம் ஓடத்தின் கட்டை அவிழ்த்துச் சிவனடியார்களை அதிலே ஏற்றி, நாவலமே கோலாக அதன்மேல் நின்று, ''கொட்டமேகமழும்'' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். சிவபெருமானுடைய திருவருளினால் ஓடஞ்சென்று மற்றக்கரையை அடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பொது. பஞ்சாக்கரத்திருப்பதிகம்*
## பண்: காந்தாரபஞ்சமம்
## பதிக எண்: 280

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன வஞ்செ ழுத்துமே 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே. 2

ஊனிலு யிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன வஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன வஞ்செ ழுத்துமே 4

•கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே 5

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன வஞ்செ ழுத்துமே 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம ளிப்பன வஞ்செ ழுத்துமே 8

கார்வண னான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே. 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே 10

நற்றமிழ் ஞானசம் பந்த னான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. 11

திருச்சிற்றம்பலம்

## பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:

*திருஞானசம்பந்தர் உபநயனச்சடங்கு நிகழ்ந்தபோது அச்சடங்கின் அங்கமாகிய ஒரு சந்தர்ப்பத்தில் வேதம் ஓதும் அதிகாரத்தைத் தந்தோம் என்னும் சடங்கு நிகழ்ந்தது. அப்போது தமக்கு உபநயனம் செய்த வேதவல்லுனர்களும் பயிலாத பலவேதங்களை சம்பந்தர் ஓதினார். அதுகண்டு அதிசயித்த அந்தணர் வேதப் பொருளான வேதமுதல்வர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தரே என மதித்துத் தாம் கற்றிருந்த வேதங்களில் தமக்கு உள்ள ஐயங்களை அவரிடமே கேட்டுத் தெளிவு பெற்று மகிழ்ந்தனர். அவர்கள் வேதங்கள் பற்றித் தெளிவான நிலையை அடையும் பொருட்டுச் சம்பந்த சுவாமிகள் அருளியதே இப்பதிகமாகும். வேதம். சைவம். திருமுறைவரலாறு என்பவற்றைப்பற்றி ஒருங்கு கற்போர் இப்பதிகம் வேதம் பற்றியும் சைவக்கோட்பாடுபற்றியும் தெளிவை உண்டாக்குவதாகக் கூறுகின்றனர். ''செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்'' எனமதிக்கத்தக்கவர் இக்காலத்திற போல அக்காலத்திலும் காயத்திரி போன்றமந்திரங்கட்கு மேலதிக முதன்மை கொடுத்ததைத் தவிர்க்க இப்பதிகம் அருளப்பட்டதாகக் கருதுகின்றனர்.

இதுமட்டுமன்றி ஒவ்வொரு சைவ சமயியும் தான் எந்த எந்தப் பயன்களைக்குறித்துத் திருவைந்தெழுத்தைச் செபிக்கலாம் என்பதைச் சுட்டி அருமைமிக்க பதிகமான இதனையும் திருவைந்தெழுத்தையும் ஓத வேண்டும்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

சீர்காழியில் திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்குப் பிராமணர்கள் வேதவிதிப்படி உபநயனச் சடங்குசெய்து, ''உமக்கு நான்குவேதத்திற்கும் அதிகாரந் தந்தோம்'' என்று சொல்லப், பிள்ளையார் எண்ணிறந்த வேதங்களை ஓதி, அவற்றிற்கு அங்கமாகிய பல கலைகளையும் எடுத்துச் சொல்லிப் பின் ''சகலமந்திரங்களுக்கும் வித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரம்'' என்பதை அவர்களுக்கும், மற்றை யாவருக்கும் விளங்கும்பொருட்டுத் ''துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்'' என்னும் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தைப்பாடி, அதில் ''வேதியர்க்கந்தியுண் மந்திர மஞ்செழுத்துமே'' என்றருளிச் செய்தனர். பிராமணர்கள் அதைக்கேட்டு மனமகிழ்ந்து அவருடைய திருவருளைத் தலைமேற்கொண்டு, வணங்கித் துதித்து உய்ந்தார்கள்.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாலவாய் பண்: கௌசிகம்
## பதிக எண்: 305

திருச்சிற்றம்பலம்

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
வேட்டு வேள்விசெய் யாவமண் கையரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே. 1

மத்த யானையி னீருரி மூடிய
அத்த னேயணி யாலவா யாய்பணி
பொய்த்த வன்றவ வேடத்த ராஞ்சமண்
சித்த ரையழிக் கத்திரு வுள்ளமே 2

மண்ண கத்திலும் வானிலு மெங்குமாம்
திண்ண கத்திரு வாலவா யாயருள்
பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்
தெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே. 3

ஓதி யோத்தறி யாவம ணாதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதி யேதிரு வாலவா யண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே. 4

வைய மார்புக ழாயடி யார்தொழும்
செய்கை யார்திரு வாலவா யாய்செப்பாய்
கையி லுண்டுழ லுமமண் கையரைப்
பைய வாதுசெ யத்திரு வுள்ளமே 5

நாறு சேர்வயற் றண்டலை மிண்டிய
தேற லார்திரு வாலவா யாய்செப்பாய்
வீறி லாத்தவ மோட்டமண் வேடரைச்
சீறி வாதுசெ யத்திரு வுள்ளமே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ட டித்தவத் தார்பயில் வாற்றொழும்
தொண்ட ருக்கெளி யாய்திரு வாலவாய்
அண்ட னேயமண் கையரை வாதினில்
செண்ட டித்துள றத்திரு வுள்ளமே 7

அரக்கன் றான்கிரி யேற்றவன் றன்முடிச்
செருக்கி னைத்தவிர்த் தாய்திரு வாலவாய்ப்
பரக்கு மாண்புடை யாயமண் பாவரைக்
கரக்க வாதுசெ யத்திரு வுள்ளமே. 8

மாலு நான்முக னும்மறி யாநெறி
ஆல வாயுறை யும்மண்ண லேபணி
மேலை வீடுண ராவெற்ற ரையரைச்
சால வாதுசெ யத்திரு வுள்ளமே. 9

கழிக்க ரைப்படு மீன்கவர் வாரமண்
அழிப்ப ரையழிக் கத்திரு வுள்ளமே
தெழிக்கும் பூம்புனல் சூழ்ந்திரு வாலவாய்
மழுப்ப டையுடை மைந்தனே நல்கிடே 10

செந்தெ னாமுர லுந்திரு வாலவாய்
மைந்த னேயென்று வல்லம ணாசறச்
சந்த மார்தமிழ் கேட்ட மெய்ஞ் ஞானசம்
பந்த சொற்பக ரும்பழி நீங்கவே 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*இப் பதிகம் திருஞானசம்பந்தசுவாமிகள் சமணருடன் வாதுசெய்து வெல்லவும் அவர்களுடன் உரையாடல் செய்து வாதிடுவதால் உண்டாகத்தக்க பாவம் தம்மைத் தொடரா திருக்கவும் எனப்பாடிய தாம்.*

*தீயாரைக் காண்பதுவும் தீது என்ற அடிப்படை ஒன்று. தான் செய்யும் செயல் நியாயப்படி சரியானதானாலும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கும் இறையருளின் துணை இருக்கவேண்டும் என்னும் அடிப்படை மற்றொன்று.

சைவசமயத்துக்கு அடிப்படை அன்பேயாகும் என்ற நோக்கிற பார்த்தால் சமணர் புத்தரிடம் அன்பு இருந்தது என்பாருளர். ஆனால் அந்த அன்பு அறிவு பூர்வமாக அதாவது வேதவிரோதமின்றி இருக்கவேண்டும் என்பது அவசியம். இக்கருத்தின் அடிப்படையிலேயே வேதம் வேள்வி என்பவற்றைப் புறக்கணிப்பவர்களை வெல்லவேண்டும் என்ற கருத்து இப்பதிகங்களில் அமைந்தது. வேள்வி என்பது சகல சீவராசிகளுக்கும் சீவராசிகளின் உயிர்க்குயிராயிருக் கும் பரம்பொருளுக்கும் இன்பத்தை உண்டுபண்ணும் செயலாதலையும் இக்காலத்திற் பலர் உடன் படாமையால் வேதவேள்விகளையும் சைவசமயத்தையும் வேறுபடுத்திச் சிந்திக்கின்றனர். இப்படியான சிந்தனை சம்பந்தசுவாமிகளிடம் இருக்கவில்லை என்பதை இப்பதிகங்கள் உணர்த்துகின்றன.

எங்கள் சமயத்தினை நிலைநிறுத்தவேண்டும் பரப்ப வேண்டும் என்று பலவாறுமுயலும் அன்பர்கள் இப்பதிகங் களைப் பாராயணம் செய்து சிவனருட்டுணையுடன் செயற்ப டுவது அவசியம். இப்பதிகத்தில் சமணம் புத்தம் என்று குறிக்கப்படுவதற்கு இக்காலத்தில் மக்களின் சைவ வாழ்வுக்கு இடையூறாயமையும் விஞ்ஞான அரசியற் கோட்பாடுகளைக் கருத்தாகக் கொள்ளலாம்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளையார் சமணர்களை வாது செய்து வெல்லுதற்குச் சொக்கலிங்கப் பெருமானுடைய திருவுள்ளத்தை அறியும் பொருட்டு, மடாலயத்தினின்றும் நீங்கித் திருக்கூட்டத்துடன் திருவாலவாயிற் புகுந்து, ''காட்டு மாவதுரித்து'' என்னுந் திருப்பதிகம் பாடிச் சிவபிரானுடைய திருவுள்ளத்தை அறிந்தருளினார்.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது நமச்சிவாயத்திருப்பதிகம் பண்: கௌசிகம்
## பதிக எண்: 307

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே. 1

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்ப னாம நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே 3

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்பு வராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே 5

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே 7

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ளாம நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்ட னமச்சி வாயவே 10

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்.

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*திருஞானசம்பந்தர் சிவப்பெருஞ்சோதியுள் தம்மணம் காணவந்தவரும் தாமும் செல்லுமுன் அருளிச் செய்த பதிகம் இது. திருஞானசம்பந்தர் திருமணத்தைத் தரிசித்தவர்களின் தீதுறு பிறப்பாகம் தீர்தற்காக இப்பதிகத்தை அருளிச் செய்தார் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் சேக்கிழார் சுவாமிகளோ யார்க்கும் அதாவது தகுதியில் மிக்கோர் குறைந்தோர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய அனைவர்க்கும் ஞானமெயந்நெறி ''நமச்சிவாயவே'' என்று வானமும் நிலனும் கேட்க அருளிய பதிகம் இது என்று தெளிவாகக் குறித்துள்ளார்.

வானுலகில் வாழும் தேவர்களுக்கும் மண்ணுலகில் வாழும் மனிதர்களுக்கும் தன் அநுபவ உண்மையைக் கூறி அனைவரையும் சிவானுபவத்துக்கு உரியராக்க வேண்டும் என்ற பெருங கருணையாலும், அறிவுபூர்வமாக உடலை நீக்கும் ஞானியர் தம்வாழ்வின் கடைசி நிலையில் கூறுவது வலிமைமிக்கது என்ற வழக்கத்தை உறுதிப்படுத்தும் உள்ளக்குறிப்பாலும் ஒருவர் அக்னிசாட்சியாகக் கூறுவது செய்வது உறுதியானது; மாற்ற இயலாதது என்ற உண்மையை ஏற்றவர் போல் சிவபரஞ்சோதி சாட்சியாகக் கூறுவது போலவும் இப்பதிகத்தைத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்தார் எனக் கொண்டு இப்பதிகப்பெருமையை உணர்ந்து வாழ முற்படவேண்டும்.

சிவபெருமானது சிறந்த திருநாமமாகவும் திருவடிவமாகவும் விளங்கும் திருவைந்தெழுத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓத வேண்டும் என்று முதலாம் பாட்டில் அருளிச் செய்தவர் மனிதரால் மட்டுமல்ல தேவர்களாற கூட இப்படி ஓதுவது சிரமம் என்று உணர்ந்தவராய் திருவைந்தெழுத்தை ஓதுவதற்குரிய நிபந்தனையைப் படிப்படியாகத் தளர்த்தி எல்லோரும் தம் ஆற்றலுக்கும் ஊக்கத்துக்கும் அமைய எப்படியாவது திருவைந்தெழுத்தை ஓதுக எனவற்புறுத்தும் இப்பதிகத்தைப் பாராயணம் செய்வோம். திருவைந்தெழுத்தை ஓதும் முயற்சியில் ஈடுபடுதல் திருஞானசம்பந்தரின் உபதேசத்தை ஏற்று வாழும் மகிமையை நல்கும்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருநல்லூர்ப்பெரு மணத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுளை நோக்கி இல்லறத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினின்று நீக்கித் தம்மைத் திருவடியிற் சேர்க்க வேண்டும் என்று பிரார்த்திக்க, அதனைத்திருச்செவி சாத்தியருளிய கருணாநிதியாகிய சிவபெருமான், நீயும், உன்மனைவியும், உன்னுடைய விவாகத்தைக்காண வந்தவர்கள் சமஸ்தரும் இந்தச் சோதியினுள்ளே வந்து நம்மை அடையுங்கள்" என்று, அருளிச் செய்து, திருக்கோயில் உட்பட மேலோங் கிய சுத்தசோதி வடிவாகி, அதில் ஒரு திருவாயிலை வகுத்துக்காட்டியருளினார். பிள்ளையார் சோதிவடிவாய் நின்ற கடவுளை வணங்கித் துதித்து, அதனை அடையும் நெறியை அருளிச் செய்யத் திருவுளங்கொண்டு, யாவருக்கும் மெய் நெறி நமச்சிவாய என்கின்ற மந்திரம் என்னுங் கருத்துடைய "காதலாகிக்கசிந்து" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைச் சமஸ்தருங் கேட்க அருளிச்செய்து, "இக்கலியாணங்காண வந்த எல்லோரும் உங்கள் சனனநோய் தீரும்பொருட்டு, இந்தச் சோதியினுள்ளே பிரவேசியுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அப்போது பிள்ளையாருடைய திருமணத் தைச் சேவிக்கப் பெற்றவர்களும், திருநீலநக்கநாயனார், முருகநாயனார், சிவபாதவிருதயர், நம்பாண்டார் நம்பி, திரு நீலகண்டப்பெரும்பாணர் முதலிய திருத்தொண்டர்களும், பரிசனங்களும், அறுவகைச் சமயிகளும் ஆகிய சமஸ்தரும் அந்தச் சிற்சோதியினுள்ளே புகுந்த பின், சர்வான்மாக் களையும் உய்விக்கும் பொருட்டுத் திருவவதாரஞ் செய் தருளிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக் கொண்டு அந்தச்சோதியை வலஞ்செய்து அதனுள்ளே புகுந்து, சிவசாயுச்சியம் அடைந்த ருளினர். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாலவாய் பண்: கௌசிகம்
## பதிக எண்: 309

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே. 1

சித்த னேதிரு வாலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பத்திமன் றென்னன் பாண்டியற் காகவே 2

தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே 3

சிட்ட னேதிரு வாலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டி மன்றென்னன் பாண்டியற் காகவே. 4

நண்ண லார்புர மூன்றெரி யாலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யற்றமிழ்ப் பாண்டியற் காகவே. 5

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றரு ளாலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வன்றென்னன் பாண்டியற் காகவே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கண் வெள்விடை யாய்திரு வாலவாய்
அங்க ணாவஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்கு லாரமண் கைய ரிடுங்கனல்
பங்கமி றென்னன் பாண்டியற் காகவே 7

தூர்த்தன் வீரந் தொலைத்தரு ளாலவாய்
ஆத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
ஏத்தி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்றென்னன் பாண்டியற் காகவே 8

தாவி னானயன் றானறி யாவகை
மேவி னாய்திரு வாலவா யாயருள்
தூவி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னான்றென்னன் பாண்டியற் காகவே 9

எண்டி சைக்கெழி லாலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனைக்
குண்ட ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டிமன் றென்னன் பாண்டியற் காகவே 10

அப்ப னாலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்த னுரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே. 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*பாண்டிய மன்னனிடம் தம் மந்திர வல்லமையால் நெருப்பெரியச் செய்து திருஞானசம்பந்தரை நாட்டை விட்டு ஓடச்செய்வோம் என்ற சமணர் தம் மந்திர ஆற்றல் திருஞானசம்பந்தர் இருக்கும் இடத்திற் பலிக்காதது கண்டு இரவில் ஒருவருக்கும் தெரியாது அவர் இருந்த மடத்துக்குத் தீவைத்தனர். தீயை அணைத்த அன்பர்கள் நிகழ்ந்ததைத்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர்க்குத் தெரிவித்தனர். மக்கள் நித்திரை செய்யும் போது தீ முதலியவற்றாலோ கள்வராலோ துன்பம் ஏற்படாது காப்பாற்றவேண்டியது அரசன் பொறுப்பாதலால் அந்தத்தீயைப் பாண்டிய மன்னனிடம் அனுப்ப எண்ணினார் சம்பந்தர். மங்கயர்க்கரசியாரின் மங்கலத்தைக் காப்பதற் காகவும் மன்னனுக்குச் சைவநெறி சேரும் புண்ணியம் இருந்ததாலும் அத்தீயை மெதுவாகக் குறைவாகச் செல்லும் படி பையவே சென்று பாண்டியற்காகவே'' எனப்பாடியருளி னார் என்பர். நாமும் நம் எதிரிகள் செய்யும் தீங்கு எம்மைத் தாக்காது எதிரிகளையே அடையட்டும் என்ற மனப்பாங்கிலும் நம்மைத்துன்புறுத்தும் தீவினைத்தாக்கம் நம் ஆணவத் தைத்தாக்கி அதன் வலியைக் கெடுக்கட்டும் என்ற மனப் பாங்கிலும் இப்பதிகத்தைப பாராயணம் செய்ய வேண்டும்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

மதுரைத்திருப்பதியிலே திருஞானசம்பந்தப்பிள்ளையார் அடியார்களோடு எழுந்தருளியிருக்கின்ற திருமடத்திலே திருத்தொண்டர்கள் ஓதுகின்ற திருப்பதிக விசையின் பேரோலி செவிப்புலப்படச், சமணர்கள் அதுபொறாராகிப் பாண்டியன் அனுமதியுடன் அத்திருமடத்திலே அக்கினிபற்றும்படி மந்திரஞ் செபித்தார்கள். உயர்வொப்பில்லாத ஸ்ரீ பஞ்சாக்கரத்தை ஓதும் அடியாருறையுந் திருமடத்திலே தங்கள் மந்திர சாதனைகள் பலியாமையைக் கண்ட சமணர்கள் மனந் தளர்ந்து, அக்கினியைக்கொண்டு போய்த் திருமடப்புறச் சுற்றிலே கொளுத்தினார்கள். அதைப்பரிசனத்தவர்கள் பிள்ளையாரிடத்தில் விண்ணப்பஞ்செய்யப், பிள்ளையார் ''சிவனடியார்களுக்குத் தீங்குவருமோ'' எனத் திருவுளங் கொண்டு, ''செய்யனே திருவாலவாய்'' என்னுந் திருப் பதிகத்தைப் பாடியருளினார். உடனே அவ்வக்கினிவெம்மை போய் அத்தீமைக்குக்காரணனாகிய பாண்டியனை அடைந்தது.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது திருப்பாசுரம் பண்: கௌசிகம்
## பதிக எண்: 312

திருச்சிற்றம்பலம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. 1

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரிய ரேறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே 2

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ 3

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்பும்
கேட்பான் புகிலளை வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார். 4

ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே 5

ஆடும் மெனவும் மருங்கூற்ற முதைத்து வேதம்
பாடும் மெனவும் புகழல்லது பாவ நீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும் மெனக்கேட் டீராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் மறிவார் சொலக் கேட்டுமன்றே 7

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூத னொலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே 8

பாராழி வட்டம் பகையா னலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே 9

மாலா யவனும் மறைவல்ல நான்மு கனும்
பாலாய தேவர்பக ரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலால முண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே 10

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினானும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வி னூரவும் பண்பு நோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*திருப்பாசுரம் என்ற பெயரால் சூட்டப்படும் இப்பதிகம் புனல்வாதத்தில் ஆற்றுநீரை எதிர்த்தோடு:தற்காகத திருஞான சம்பந்தசுவாமிகளால் அருளப்பட்டது. இப்பதிகத்தில் பன்னிரு பாடல்கள் அமைந்தமையும் முதல் மூன்று பாடல்கள் ஒரு செய்யுளமைப்பிலும் ஏனையவை வேறு செய்யுளமைப்பிலும் அமைந்துள்ளன. இத்தன்மைகளைப் பெரும்சிறப்பாகக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பனனிரு சூத்திரங்களையுடைய சிவஞானபோதத் துக்கு அடிப்படையானது இப்பதிகம் என்பர். இப்பதிகத்துக்குச் சேக்கிழார் பெரிய புராணத்தில் செய்யுள்வடிவிலேயே சிறந்த உரை கண்டுள்ளார்.

முதலாம் பாடலில் உள்ள வீழ்கதண்புனல் என்ற தொடரில் உள்ள வீழ்க என்னும் சொல் வீழ்ச்சியைக் குறிக்கும் அமங்கலச் சொல்லாக இருந்தபோதும் மழை வீழ்ச்சியைக் குறிக்கச் செய்து அச் சொல்லைக்கூடச் சம்பந்தசுவாமிகள் மங்கலச் சொல்லாகப் பயன்படுத்தி யுள்ளார் என இன்புறுபவர் உள்ளனர். இப்பாடல் அரன்னா மமே சூழ்க என்று பாடியதன் விளைவாக அரகரமகாதேவா அரோகரா என்பனவாக அரகர என்று சொல்லும் வழக்கம் உண்டாகி நிலைபெறுகின்றதென்பர்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளயார் மதுரைத்திருப்பதியிலே பாண்டியன் அரண்மனையில், எழுந்தருளியிருந்தபொழுது, சமணர்கள், ''நாங்கள் இரு பஷத்தோரும் எங்கள் சமயவுண் மையை எழுதிய ஏட்டை ஓடுகின்ற வைகையாற்றிலே இடுவோம். எதிர்நது செல்லும் ஏடே மெய்ப்பொருளையு டையது'' என்று கூறப், பிள்ளையார் ''அப்படியே செய்வோம்'' என்று அருளிச்செய்தார். சமணர்கள் 'அத்தி நாத்தி'' என்று எழுதிய ஏட்டை, வைகைநதியில்இட அது விரைந்து கடலைநோக்கி ஓடிற்று. பிள்ளையார் ''வாழ்க வந்தணர்'' என்னுந் திருப்பாசுரத்தைப்பாடி ஏட்டில் எழுதி அதை வைகையில் இட்டருளலும், அத்திருவேடு நதியிலே எதிர்ந்து ஜலத்தைக் கிழித்துக்கொண்டு சென்றது. சிவபிரானே எல்லாப்பொருளும் என்று எழுதிய திருவேட்டிலே ''வேந்தனுமோங்குக'' என்று பாடியருளியபடியால் கூன் பாண்டியராஜனுடைய கூனும் நிமிர்ந்தது.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநள்ளாறு திருவிராகம் பண்: சாதாரி
## பதிக எண்:345

திருச்சிற்றம்பலம்

தளிரிள வளரொளி தனதெழி நருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர் தந் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 1

போதமர் தருபுரி குழலெழின் மலைமகள் பூணணி
சீதம தணிதரு முகிழிள வனமுலை செறிதலின்
நாதம தெழிலுரு வனையநள் ளாறர் தந் நாமமே
மீதம தெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 2

இட்டுறு மணியணி யிணர்புணர் வளரொளி யெழில்வடம்
கட்டுறு கதிரிள வனமுலை யிணையொடு கலவலின்
நட்டுறு செறிவயன் மருவுநள் ளாறர்தந் நாமமே
இட்டுறு மெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே 3

மைச்சணி வரியரி நயனிதொன் மலைமகள் பயனுறு
கச்சணி கதிரிள வனமுலை யவையொடு கலவலின்
நச்சணி மிடறுடை யடிகணள் ளாறர்தந் நாமமே
மெச்சணி யெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே 4

பண்ணியன் மலைமகள் கதிர்விடு பருமணி யணிநிறக்
கண்ணியல் கலசம தனமுலை யிணையொடு கலவலின்
நண்ணிய குளிர்புனல் புகுதுநள் ளாறர்தந் நாமமே
விண்ணிய லெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே 5

போதுறு புரிகுழன் மலைமக ளிளவளர் பொன்னணி
சூதுறு தளிர்நிற வனமுலை யவையொடு துதைதலின்
தாதுறு நிறமுடை யடிகணள் ளாறர்தந் நாமமே
மீதுறு மெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்மலி நெறிபுரி சுரிகுழன் மலைமகள் கவினுறு
சீர்மலி தருமணி யணிமுலை திகழ்வொடு செறிதலின்
தார்மலி நகுதலை யுடையநள் ளாறர்தந் நாமமே
ஏர்மலி யெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 7

மன்னிய வளரொளி மலைமக டளிர்நிற மதமிகு
பொன்னியன் மணியணி கலசம தனமுலை புணர்தலின்
தன்னிய நசமுக னெரியநள் ளாறர்தந் நாமமே
மின்னிய லெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 8

கான்முக மயிலியன் மலைமகள் கதிர்விடு கனமிகு
பான்முக மியல்பணை யிணைமுலை துணையொடு பயிறலின்
நான்முக னரியறி வரியநள் ளாறர்தந் நாமமே
மேன்முக வெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 9

அத்திர நயனிதொன் மலைமகள் பயனுறு மதிசயச்
சித்திர மணியணி திகழ்முலை யிணையொடு செறிதலின்
புத்தரொ டமணர்பொய் பெயருநள் ளாறர்தந் நாமமே
மெய்த்திர ளெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 10

சிற்றிடை யரிவைதன் வனமுலை யிணையொடு செறிதரும்
நற்றிற முறுகழு மலநகர் ஞானசம் பந்தன
கொற்றவ னெதிரிடை யெரியினி லிடவிவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே. 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*அனல்வாதம் செய்யும்போது "போகமார்த்த" என்னும் திருநள்ளாற்றுப் பதிகத்தைத் திருஞானசம்பந்தர் அங்கிருந்த நெருப்பிலிடும் போது இப்பதிகத்தை அருளிச் செய்தார். நெருப்பில் அப்பதிகம் வேகாது இருக்க வேண்டும். இருக்கும் என்ற தன்மையில் இப்பதிகம் பாடப்பட்டது. தேவாரப்பதிகங*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் பதிகம் பதிகமாகப் பாராயணம் செயயவேண்டும். தனிப்பாடலாகப் பாராயணம் செய்வது சிறந்ததன்று என நம்புகின்றனர். இவர்கள் கோட்பாடு அழகிதேயாயினும் திருமுறைப் பதிகத்தின் தனிப்பாடல்மட்டுமன்று ஒரு திருப்பாடலிலுள்ள ஒரு தொடரில் ஈடுபட்டு அதை நினைப்பதும் சொல்வதுமே நன்மை பயக்கும் என்பதை இப்பதிகம் உணர்த்துகின்றது.

திருநள்ளாற்றுப் பதிகமாயமைந்து நெருப்பிலிடப்பட்ட பதிகம் ''போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம் பாகமார்த்த ..... அண்ணல்'' என்ற பகுதியை உடைய தாதலால் நெருப்பில் வேகாது என்றகருத்தையே சம்பந்த சுவாமிகள் தளிரிளவளரொளி எனத் தொடங்கும் இப்பதிகப் பாடல்களில் குறித்துள்ளமை கவனிக்கத்தக்கது. இக்கருத்து போகமார்த்த எனத் தொடங்கும் பதிகத்தில் பிற இடங்களில் வலிமை பெறவில்லை. எனவே சம்பந்தர் ஒரு தொடரையே ஏற்றுள்ளார் என்பதையும் இத் தொடரில் உள்ளகருத்தையும் நாம ஊன்றிச் சிந்திக்க இப்பதிகம் தூண்டுகின்றது.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தப்பிள்ளையார் மதுரைத் திருப்பதியில் எழுந்தருளியிருந்து தமிழ் வேதத் திருமுறையில் உதயமான ''போகமார்த்த பூண் முலையாள்'' என்னுந் திருப்பதிகம் எழதப்பட்ட திருவேட்டைத் திருக்கரத்திலே கொண்டு, பாண்டியர் சபைமுன்னே, ''பரமசிவனே பரம்பொருள்'' என்பதைச் சமஸ்தருக்கும் உணர்த்தும் பொருட்டு ''இவை அக்கினியில் இடப்படுமாயிற் பழுதில்லை, இது சத்தியம்' என்னுங் கருத்தையுடைய ''தளிரிள வளரொளி'' என்னுமித் திருப்பதிகம் பாடியருளினார்.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாலவாய் நாலடிமேல்வைப்பு
## பண்: பழம்பஞ்சுரம்
## பதிகஎண்: 366

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாயபரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 1

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் காரமண் டேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 2

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையின் மாமழு வாளனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 3

அறுத்த வங்கமா றாயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்க டம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாலவாய் நாலடிமேல்வைப்பு
## பண்: பழம்பஞ்சுரம்
## பதிகஎண்: 366

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாயபரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 1

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் காரமண் டேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 2

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையின் மாமழு வாளனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 3

அறுத்த வங்கமா றாயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்க டம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ணாளர் புரியு மருமறை
சிந்தை செய்யா வருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 5

வேட்டு வேள்விசெ யும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை யுரித்தவெங் கள்வனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 6

அழல தோம்பு மருமறை யோர்திறம்
விழல தென்னு மருகர் திறத்திறம்
கழல வாதுசெயத்திரு வுள்ளமே
தழலி லங்கு திருவுருச் சைவனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 7

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவு நில்லா வமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கு மருளினாய்
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 8

நீல மேனி யமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலு நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முப்புரஞ் செற்ற வழகநின்
துன்று பொற்கழல் பேணா வருகரைத்
தென்ற வாதுசெ யத்திரு வுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞான நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே 10

கூட லாலவாய்க் கோனை விடைகொண்டு
வாடன் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தவிப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே 11

திருச்சிற்றம்பலம்

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

*இப் பதிகம திருஞானசம்பந்தசுவாமிகள் சமணருடன் வாதுசெய்து வெல்லவும் அவர்களுடன் உரையாடல் செய்து வாதிடுவதால் உண்டாகத்தக்க பாவம் தம்மைத் தொடரா திருக்கவும் எனப்பாடிய தாம்.*

*தீயாரைக் காண்பதுவும் தீது என்ற அடிப்படை ஒன்று. தான் செய்யும் செயல் நியாயப்படி சரியானதானாலும் அதற்கும் இறையருளின் துணை இருக்கவேண்டும் என்னும் அடிப்படை மற்றொன்று.*

*சைவசமயத்துக்கு அடிப்படை அன்பேயாகும் என்ற நோக்கிற பார்த்தால் சமணர் புத்தரிடம் அன்பு இருந்தது என்பாருளர். ஆனால் அந்த அன்பு அறிவு பூர்வமாக அதாவது வேதவிரோதமின்றி இருக்கவேண்டும் என்பது அவசியம். இக்கருத்தின் அடிப்படையிலேயே வேதம் வேள்வி என்பவற்றைப் புறக்கணிப்பவர்களை வெல்லவேண்டும் என்ற கருத்து இப்பதிகங்களில் அமைந்தது. வேள்வி என்பது சகல சீவராசிகளுக்கும் சீவராசிகளின் உயிர்க்குயிராயி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் பரம்பொருளுக்கும் இன்பத்தை உண்டுபண்ணும் செயலாதலையும் இக்காலத்திற் பலர் உடன் படாமையால் வேதவேள்விகளையும் சைவசமயத்தையும் வேறுபடுத்திச் சிந்திக்கின்றனர். இப்படியான சிந்தனை சம்பந்தசுவாமிகளிடம் இருக்கவில்லை என்பதை இப்பதிகங்கள் உணர்த்துகின்றன.

எங்கள் சமயத்தினை நிலைநிறுத்தவேண்டும் பரப்ப வேண்டும் என்று பலவாறுமுயலும் அன்பர்கள் இப் பதிகங்களைப் பாராயணம் செய்து சிவனருட்டுணையுடன் செயற்படுவது அவசியம். இப்பதிகத்தில் சமணம் புத்தம் என்று குறிக்கப்படுவதற்கு இக்காலத்தில் மக்களின் சைவ வாழ்வுக்கு இடையூறாயமையும் விஞ்ஞான அரசியற் கோட்பாடுகளைக் கருத்தாகக் கொள்ளலாம்.

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்**

திருஞானசம்பந்தப்பிள்ளையார் ''காட்டுமாயையமித்து'' என்னுந் திருப்பதிகம் பாடிச் சிவபிரான்றிருவுளக்கருத்தை யறிந்த பின்னர்ச், சமணர்களை வாதில்வென்று அழிக்கும்பொருட்டும், சிவநாமத்தையே பரப்பும் பொருட்டும், ''வேதவேள்வியை'' என்னுந திருப்பதிகம் பாடியருளினார்.

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநல்லூர்ப்பெருமணம் பண்–அந்தாளிக்குறிஞ்சி
## பதிக எண்: 383

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே. 1

தருமண லோதஞ்சேர் தண்கட னித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயு நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணோர் பாகங்கொண் டானே 2

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே 3

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே. 4

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே. 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டப்பட் டார்க்கெளி யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டறா நல்லூர்ப் பெருமணத்
திட்டப்பட் டாலொத்தி ராலெம் பிரானிரே 6

மேகத்த கண்டனெண் டோளன்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்த னல்லூர்ப் பெருமணத் தானல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே. 7

தக்கிருந் தீரன்று தாளா லரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே 8

ஏலுந்தண் டாமரை யானு மியல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே 9

ஆத ரமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதன தாடொழ வீடெளி தாமே 10

நறும்பொழிற் காழியுண் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே. 11

திருச்சிற்றம்பலம்

இது சோழநாட்டிலுள்ள தலம்

இறைவன்: சிவலோகத்தியாகேசர். இறைவி: திருவெண்ணீற்றுமையம்மை.



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டிதர் தி, பொன்னம்பலவாணர் தரும் விளக்கம்:**

அருமை பெருமை மகிமை இனிமை எல்லாம் பொருந்திய பதிகம் இது. திருமணமண்டபத்தில் மணப்பெண் கழுத்தில் திருமாங்கல்யதாரணம் செய்த பின் அக்கினியை வலம் வந்து நெற்பொரி இட்டு வணங்கவேண்டிய கிரியையைச் செய்யும் சந்தர்ப்பம் வந்த போது ஆலயத்தை அடைந்து சிவபெருமானை வணங்க வேண்டும். திருமணமண்டபத்தில் வணங்கப்படும் அக்கினி சிவபெருமானே என்ற உணர்வுடன் ஆலயத்தை அடைந்த திருஞானசம்பந்தர் சிவபிரான் இப்போது என்னைத்தன் புதுமையான திருவடிகளிற சேர்த்தருள்வார் என்ற உணர்வு எழத் தான் மட்டுமன்றித் திருமணத்துக்கு வந்த அனைவரது த்துறு பிறப்பாசம் தீர்தலையும் தன்னுடன் திருமணத்துக்கு வந்தோர் அனைவரையும் சிவபெருமான் தம்திருவடிகளில் சேர்த்தருள வேண்டும் என்னும் முறையீட்டையும் உடையதாக இப்பதிகத்தை அருளிச் செய்தார்.

இப்பதிகத்தைத் திருஞானசம்பந்தர் அருளிய சந்தர்ப்பத்தைப் பாடிய சேக்கிழார் வாக்காகிய கர்தல் மெய்ப்பதிகம்" என்னும் பாடலும் இதற்கு முன்னதான ''சிவன மர்ந்தருளும்" எனும் தொடக்கப் பாடலும் கவனிக்க வேண்டியன.

இப்பதிகத்தில் உள்ள 'எந்தை இணையடி ஏத்துவார் துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே' நல்லபோகத்தின் யோகத்தையே புரிந்தானே" ''நல்லூர்ப்பெருமணம் புக்கிருந்தீரெமைப் போக்கருளீரே" ''தாமரையானும் ..... மாலும்தம் மாண்பறிகின்றிலர் மாமறை நாலும் தம்பாட்டென்பர்.

''நல்லூர்ப் பெருமணத்தானைஉறும் பொருளாற்சொன்ன ஒண் தமிழ்" போன்ற தொடர்கள் பலமுறையும் ஓதிச் சிந்திக்க வேண்டியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவாமிநாத பண்டிதர் பதிப்பில் உள்ள விளக்கம்:**

திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குத் திருக்கலியாணஞ் செய்தருளுதற்குரிய பருவம் வந்தெய்திய பொழுது சிவபாத விருதயரும் அவர் சுற்றத்தாரும் ஒருங்கு கூடி, பிள்ளை யாரைநோக்கித் தேவரீர் வைதிகச்சடங்கைப் பிறருக்குக் காட்டும்பொருட்டு, ஓர் கன்னியை விவாகஞ் செய்தருளல் வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்யப் பிள்ளையார் வேத நெறி நிலைப்படும்பொருட்டு அதற்கு உடன்பட்டருளினார். உடனே தந்தையாரும், "சுற்றத்தாரும் மனமகிழ்ந்து திருநல்லூர் நம்பாண்டார்நம்பி என்பவருடைய புத்திரியே திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு மனைவியாதற்குத் தகுதியுடையள் என்று எண்ணி விவாகம்பேசினர். நம்பாண் டார்நம்பியும் அதற்கு உடன்பட்டனர். பின்பு திருநல்லூரிலே நம்பாண்டார்நம்பி கிருகத்தில் விவாகம் நடக்கும்போது பிள்ளையார் திருமாங்கலியத்தைச்சாத்தி, பொரியை அக்கினியில் இட்டு, அக்கினியாவார் சிவபிரானே எனக்கருதி வேதவிதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலஞ்செய்து, தமது திருமணத்திற்கு வந்திருந்த யாவரும் சூழும்படி மனைவியாரோடு திருப்பெருமணம் என்னும் சிவாலயத்திற் பிரவேசித்து, தம்முடைய திருமணத்தைத் தரிசித்தவர்களுடைய பாசத்தை நீக்கத் திருவுளங்கொண்டு, பரம் பொருளே! தேவரீருடைய திருவடிகளை அடையும் பதம் இது என்று "கல்லூர்ப் பெருமணம்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளலும், அப்பொழுது கருணாநிதியாகிய சிவபெருமான் சுத்த சோதிவடிவாய்த்தோன்றுதலும் அச்சோதியுள் யாவரையுமுன்னர்ச் செலுத்திவிட்டுப் பின்னர்த் தாம் மனைவியாரோடு புகுந்து சாயுச்சியம் அடைந்தார். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MAY SHE ATTAIN MOKSHA

It is with deep sorrow I came to know of the demise in UK of Mrs.Kamaleswary Kulasingham, affectionately know to us as Kamala Aunty, I have known the Kulasingham family ever since they moved into the flats opposite my house over 30 years back. Kamala Aunty was a person with rare qualities, very much devoted to her religion and a person with immense desire to entertain her friends and family members. She entertained and lovingly looked after in her own home her friends and relations that came to her house from her village. We never missed her delicious sweet meats at every festival and whenever she made a special dish our share was always at the doorstep.

The Mayurapathy Kovil near her house had a very small beginning. She contributed lavishly to bring it into its present position I am aware that she had rendered much assistance to the temples in her hometown in Jaffna. In all these efforts she had the unstinted support of her loving husband and children.

Kamala Aunty was very much concerned about her children who were abroad. I was very happy when her son Ravi came down to Colombo to be personally present at the interview for immigration to UK and thereby ensure that no stones were left unturned. This is the quality of her children whom she had brought up with loving care and concern and thereby bearing testimony of a loving wife and mother. It is indeed very fortunate for her to pass away in the midst of her children.

Aunty Kamala, you leave behind a precious husband, my sincere friend MrKulasingham, and sons Ravi and Udi and daughters Jayanthi and Sumathi all exemplary members of a loving family. My deepest sympathies for them all on behalf of my family.

May she attain Moksha
W.J.Peris
Ret. Electrical Enginer
No. 22, Parakumba Place
Colombo-06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி குலசிங்கம் காமாட்சிப்பிள்ளை (கமலேஸ்வரி) வாழ்வு சீராய்வு

கமலம் என்று அன்போடு எல்லோராலும் அழைக்கப்படு கின்ற அக்கா திருமதி காமாட்சிப்பிள்ளை குலசிங்கம் அவர் கள் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தைந்தாம் ஆண்டு ஆனி மாதம் இருபத்தோராம் திகதி தெல்லிப்பழை பெரும் நிலச்சுவாந்தர் வியரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் இரண் டாவது பெண் குழந்தையாகப் பிறந்தார். இவருடன் திருமதி பரமேஸ்வரி ஸ்ரீசோமஸ்கந்தர், அமரர் கனகரத்தினம்,அமரர் அப்பாத்துரை, அமரர் விமலநாதன், ஜெகநாதன், அமரர் குகநாதன், பாக்கியநாதன், திருமதி சர்வேஸ்வரி விநாயகமூர்த்தி, கமலநாதன் எனப் பெண் சகோதரிகள் இருவரும் ஆண் சகோதரர்கள் எழுவரும் உடன் பிறந்தனர்.

அவரது வீட்டு நுழைவாயிலில் இரண்டு கரையிலும் யானைக் குட்டி கட்டப்பட்டு ஆனைக்குட்டி வளவு எனப் பெயர் பெற்றது. வீட்டு முன் காங்கேசன்துறை வீதியின் இரு மருங்கிலும் பேரூந்து தரிப்பிடம் இருக்கின்ற காரணத்தினால் ஆனைக்குட்டி வளவுப் பெயர் பிரசித்தம் பெற்றது.

எனது பெரிய தகப்பனாரான அமரர் விஜயரத்தினம் அவர்கள் கல்வியிற் சிறந்து விளங்கியவர். இவர் யாழ்/ பரமேஸ்வரக் கல்லூரியில் சுவாமி விபுலாநந்த அடிகள் உதவி அதிபராக இருந்த காலத்திற் கல்வி கற்று, சிறிது காலம் அதே பாட சாலையில் அவரின் கீழ் ஆசிரியராகப் பணி புரியும் பாக்கியம் பெற்றவர். அதுமட்டுமல்ல அவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரர். இன்றும் தெல்லிப்பழையில், சுவாமி விபுலாநந்தருடன் இளம் உதைப்பந்தாட்ட வீரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயரத்தினம் உடன் இருக்கும் உதைப்பந்தாட்ட வீரரணிப் படம் காணப்படுகின்றது. இத்தகைய திறமைகளை அக்கா தனது பிள்ளைகளிடம் கண்டார்கள், மகிழ்ச்சி உற்றார்கள். அக்கா ஆரம்பக் கல்வியைத் தனது மூதாதையரில் ஒருவரான செல்லப்பா உபாத்தியாயரினால் சைவப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டுப் பிற் காலத்திற் காலத்தின் கோலமாக அமெரிக்க மிசனரி பாட சாலையாக மாற்றப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிற் கற்றார்கள். தன் உயர்கல்வியை மருதனாமடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் H.S.C. உயிரியற் பிரிவிற் கற்றுக்கொண்டு இருக்கும் போது, ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தி எட் டாம் ஆண்டு மாசி மாதம் எட்டாம் திகதி - பன்னாலையைச் சேர்ந்தவரும், மலேசியாவில் உயர்தொழில் செய்தவருமான திருவருள் - சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வன் திரு.குல சிங்கம் அவர்களைத் திருமணம் புரிந்தார். இத்திருமண பந்தத்தால் அக்காவின் உயர் கல்வி தடைப்பட்டது.

எனது தாயார் வேதநாயகியின் மூத்தவரான எனது பெரியதாயார் தங்கம்மா அவர்கள் கணவனின் பணிவிடை களைச் செய்வதிலும் வந்தோரை வரவேற்கும் விருந்தோம்பற் பண்பிலும் சிறக்க வாழ்ந்தவர் என்றால் மிகை அல்ல.

*இல்லதெ னில்லவண் மாண்பானால் உள்ளதென்*
*இல்லவள் மாணாக் கடை.* - *திருக்குறள்*

## கொழும்பு வருகை

கணவர் குலசிங்கம் அவர்கள் கொழும்பு மாநகர சபை முதல்வர் காரியாலயத்தில் முக்கிய உத்தியோகஸ்தராகக் கடமையாற்றியதால் அக்கா தெல்லிப்பழையில் இருந்து கொழும்பு சென்று இல்வாழ்க்கையைத் தொடங்கினார்கள். கொழும்பு வரும்போது விருந்தோம்பற் பண்பு இன்சொல் பேசுதல், மலர்ந்த முகம், கணவன் பணிவிடைகள் என்பவற்றைத் தாய்வீட்டுச் சீதனமாகக் கொணர்ந்தார் போலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது இல்வாழ்வின் பயனாகச் ஜெயந்தி, சுமதி ரவிசங்கர்- உதயசங்கர் என நான்கு பிள்ளைகளைப் பெற்றார்-பிள்ளை கள் பெற்றோரின் அன்பான, கருணையான, ப்ராமரிப்பில் கொழும்பில் பெயர் பெற்ற பாடசாலைகளில் உயர்கல்வி வரை பயின்றனர். அவரின் பிள்ளைகள் நாட்டின் சூழ் நிலமை காரணமாக இங்கிலாந்திலும், கனடாவிலுமாகக் குடிபெயர்ந்து நற்றொழில் செய்கின்றார்கள். ஜெயந்தி- நந்தகுமாரையும், சுமதி - சிறினிவாஸ்சையும் (கனடா), ரவிசங்கர்- தயாரக்ஷினியையும், உதயசங்கர்- நகுலேஸ்வரியையும் திருமணம் செய்து கொண்டனர். பிள்ளைகளின் இல்லறத்தின் பயனாக முறையே மிதிலா, பிரகாஸ், காயத்திரி, அஞ்சலி, நிரோசன், அனு ஜன், அஜத், ரம்மியா எனும் பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

அக்கா யா/ இராமநாதன் மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக்கிளையின் மத்திய சூழு அங்கத்தவராகித் திருமதி.சத்தியதேவி நடராஜா, திருமதி ஆழ்வாப்பிள்ளை போன்ற சக அங்கத்தவர்களுடன் யா/ இராம நாதன் மகளிர் கல்லூரி வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் ஈடு பட்டார்.

வாழ்க்கைத் துணைவி என்ற பொறுப்பில் வள்ளுவர் வாக்கியத்துக்கு இணங்க 'மனைத்தக்க மாண்பு உடையள் ஆகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.' அதாவது குடும்ப வாழ்க்கை திருப்தி காண மனைவி கணவனது வருவாய்கும் சமூக சூழல் நிலைக்குமேற்ப நடப்பதே சிறந்த முறை என்பது இதன் பொருள். ஆங்கிலத்தில்:- IT IS ESSENTIAL FOR HAPPINESS IN FAMILY LIFE THAT CULTURALLY AND ECONOMICALLY THE WIFE SHOULD FALL IN TO LINE WITH THE FAMILY OF HER ADOPTION. அக்கா இக்குறளுக்கேற்ப வாழ்கை நடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபநிடதத்தில UPANISHD AS KATHOPANJSHAD ii.24 பரிந்து ஓம்பிக்காக்க ஒழுக்கம் என்று கூறப்பட்டுள்ளது DISCIPLINE OF LIFE IS MORE PRECIOUS THAN LIFE IT SELF இது அக்காவின் குறிக்கோள். அக்கா தனது கடமைகளைச் செவ் வனே நடாத்த தெல்லிப்பழை தரைமன் கலட்டிப் பிள்ளையார், தெல்லிப்பழை காசிவிநாயகர், துர்க்கை அம்பாள் வெள்ள வத்தை மயூராபதி அம்மன் கருணையை வேண்டினார். அவர்களின் கருணை அக்கா தனது கடமைகளைச் சரிவரச் செய்ய, வழிகாட்ட, முன்னோடியாக இருந்தது. அக்கா கொழும்பில் வசித்து வந்த போதும் ஊரில் தெல்லிப்பழையில் அவர்களது குலதெய்வமான தரைமன் கலட்டிப்பிள்ளையார் கோயில், தெல்லிப்பழை காசி விநாயகர் தெல்லிப்பழை துர்க்கைஅம்மன் ஆலயங்களின் வளர்ச்சியில் தமது பங்களிப்புகளைச் செய்துவந்தார். அக்கா வின் சமூகப் பணியில் ஈண்டு குறிப்பிடப்படவேண்டியது வெள்ளவத்தை மயூரபதி ஆலயத்துடனான தொடர்பு. அவ் ஆலயம் அரசமரத்தின் கீழ் சிறியகுடில் ஆலயமாக இருந்த காலந் தொட்டே மிகுந்த ஈடுபாட்டுடன் வணங்கி வந்தார். இன்று இவ்வாலயம் சமய உலகம் தெரிந்த ஆலயமாக வளர்ச்சி கண்டுள்ளது. அவ்வாலயத் திருப்பணிகளில் தனது குடும்பத்தினருடன் முழுமையான ஈடுபாட்டைக் காட்டி நின்றவர் என்றால் மிகை அல்ல.

BHAGAVAD GITA இல் இந்த மார்கம் தெளிவாகச் சொல் லப்பட்டு இருக்கிறது. ஆங்கிலத்தில்:- NOW I AM CONFUSED ABOUT MY DUTY AND HAVE LOST ALL COMPOSURE BECAUSE OF MISERLY WEARNESS IN THIS CONDITION I AM ASKING YOU (KRISHNA) TELL ME FOR CERTAIN WHAT IS BEST FOR ME. NOW I AM YOUR DESCIPLE AND A SOUL SURRENDERED IN TO YOU PLEASE INSTRUCT ME (KRISHNA)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விருந்தோம்பல்**

அக்கா வீட்டுக் கதவுகள் உடன் பிறந்தோர் உற்றார் உறவினர், நண்பர் என்ற பாகுபாடு இன்றி யாவருக்கும் திறந்திருக்கும். அங்கு போனோர் சாப்பிடாமல் திரும்பினோர் இல்லையெனலாம். அக்காவை யார் நினைத்தாலும் அவரது விருந்தோம்பலை மறக்க முடியாது. ‘இருந்து ஓம்பி இல் வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு’ என்பது வள்ளுவர் வாக்கு. ஆங்கிலத்தில்:- FAMILY LIFE IS NOT A RIGHT. BUT A DUTY ARISING. OUT OF THE OBLIGATIONS OF THE INDIVIDUAL TO SOCIETY.

HELP MAY BE GIVEN TO THOSE WHO SEEK HELP.

**இங்கிலாந்து வருகை**

பதின்மூன்றாம் திகதி புரட்டாதி மாதம் இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு தங்களது பிள்ளைகளுடன் வாழத் தனது கணவருடன் இலங்கையில் இருந்து இங்கிலாந்து வந்து மெயிட்ஸ்டோன (MAIDSTONE) நகரில் களிப்புடன் வாழ்ந்தார்.

இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு நோயினால் பீடிக்கப் பட்டு வையித்தியசாலையில் பல தடவைகள் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்றார். பதினொராம் திகதி, இரண்டாம் மாதம் இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு மீளாத்துயிலில் ஆழ்ந்தார்கள்.

அக்காவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**வைத்திய கலாநிதி நு.கணநாதன்**

Preston
Lancas
U.K



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நன்றியுடன் நினைகின்றோம்

- அமரரின் இறுதி நிலையில் அவர் ஆத்மாவின் அமைதியான பிரிவிற்கு உதவும் வகை பணியாற்றிய அன்புள்ளங் கொண்டவர்களுக்கு,
- இறுதிக் கிரியைகள் செவ்வனம் நடைபெற முன்னின்று ழைத்த பெருமனம் படைத்தவர்களுக்கு,
- கிரியைகளின் ஒழுங்குமுறைகளைச் சிந்தித்து நெறிப்படுத்திய வர்களுக்கு,
- தொலைத்தொடர்புச் சாதனங்கள் மூலம், அஞ்சல் மூலம், நேரில் அநுதாபந் தெரிவித்து ஆறுதலளித்தவர்களுக்கு,
- மலர்வளையம், மலர்மாலை, மலர் என்பன கொண்டு அஞ்சலித்தவர்களுக்கு
- அந்தியேட்டிக்கு முன்னும் பின்னுமான கிரியைகளின் பங்களிப்புச் செய்தோருக்கு உதவியோர்க்கு,
- அமரரின் ஆத்மசாந்தி நோக்குடன் நடைபெற்ற மதிய போசன விருந்திற் கலந்து சிறப்பித்தவர்களுக்கு

எமது இதயபூர்வமான நன்றி.

| கணவர் | பிள்ளைகள் | மருமக்கள் |
|---|---|---|
| தி. குலசிங்கம் | ந. ஜெயந்தி | நந்தகுமார் |
| | ஸ்ரீ. சுமதி | ஸ்ரீனிவாசன் |
| ஆனைக்குட்டிவளவு, | கு. ரவிசங்கர் | தயாரக்ஷினி |
| தெல்லிப்பழை. | கு. உதயசங்கர் | நகுலேஸ்வரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீர்காழி ஆலயத்தின் ஒரு தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தர் அவதரித்த இல்லம்